# தனிநாடு கோருவதை இப்போது கைவிட்டு விட்டாராம்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன் : 389

மலர் 12
இதழ் 215
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 29 ஜுபு 12 திங்கட்கிழமை (14-9-70)

லாலா சோப்

செல்வச்சன்னதி தேரை முன்னிட்டு இன்றும் நாளையும் கோவில் வீதியில் அமைக்கப்பெற்ற எமது 3 காட்சிச்சாலையிலும் சோப் வாங்குபவர்களுக்கு ஓர் அழகான பை இனமாக வழங்கப்படும்.

லாலாசோப்தொழிற்சாலை
அச்சுவேலி.

## ஈ. வே. ரா. அறிவிப்பு

சென்னை, செப் 13

தனிநாடு கோரிக்கையைத் தாம் இப்பொழுது கைவிட்டு விட்டதாக திராவிடக் கழகத்தலைவர் ஈ. வே. ரா பெரியார் கூறினர்

திராவிடமுன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளின்போது பெரியார் உரைநிகழ்த்தினர்

இந்திய அரசின் இணைப்பில் அமைந்த சுயாட்சியையே தி மு கழகத்தினர் கேட்கிறார்கள் என்றும் இதைப்பற்றி தப்பாகக் கருதக்கூடாதென்றும் பெரியார் கூறினர்.

இந்த மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணாநிதி பேசுகையில், மாநிலசுயாட்சிக் கோரிக்கைக்கும் தனிநாடு கோரிக்கைக்கும் சம்பந்தமில்லையென்றும் தனிநாடு கோரிக்கையை திராவிடமுன்னேற்றக்கழகம் எப்பொழுதோ கைவிட்டு விட்டதென்றும் குறிப்பிட்டார் பிரிந்துபோக உரிமையில்லாத சுயாட்சியுடனுனசமஷ்டியையே தாங்கள் கோருவதாக அவர்கூறினர்.

மாநில அரசுகளுக்குஅதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டுமென்பதைஅவர் வலியுறுத்துகையில், மக்களுக்கு அதிக நன்மைகளை இலகுவாக செய்துகொடுப்பதன் நோக்கத்துடனேயே இதைக்கோருவதாகக் கூறினர். தஞ்சை பெரிய கோவிலில்ராஜராஜசோழன் சிலைவைப்பதற்குகூட தமிழ்நாடு அரசுக்கு உரிமைஇல்லையென்றும் மதராஸ்வானொலி என்பதை சென்னை வானொலி என்று கூறும்படி கோரிய தற்குகூடமத்திய அரசு இணங்க மறுத்துவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மணவைத்தம்பி கருணாநிதிக்கு அனுப்பிய தந்தி

கொழும்பு, ஞாயிறு

தமிழர்களுக்கானதனிநாடு ஒன்றை நிறுவுவதன் மூலமே தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள தமிழர்களுக்கு விமோசனத்தை ஏற்படுத்த முடியும் என்று இலங்கை தி. மு. க தலைவர்களிளஒருவரான திரு. மணவைத்தம்பி தமிழ் நாடு முதலமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியில் கூறியுள்ளார்

தமிழ்நாட்டில் நடைபெறும் மாநிலசுயாட்சி மாநாட்டையொட்டி அவர் அனுப்பிய இந்தச்செய்தியில், சுயாதிபத்தியமுள்ள தனித்தமிழ் நாட்டுக்கான போராட்டத்தை தொடரும்படியும் வெளிநாடுகளிலுள்ள தமிழர்களின் பிரச்னையில் இந்திரா அரசு வழுக்கல் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவும் இவர்கள் இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்னையை அனுதாபத்துடன் தீர்க்கமாட்டார்கள் என்றும் சுதந்திரமான தமிழ் நாட்டினுல்தான் இந்தப்பிரச்னையை கண்ணியமாகவும், மரியாதையோடும் தீர்த்து வைக்கப்பட முடியுமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைப் பிரஜாவுரிமை கோரி மனுச்செய்திருந்த திரு மணவைத்தம்பியின் மனு நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே (சி பி ஏ)

# சமத்துவம் ஏற்பட இருமொழிகளும் உபயோகப்படுத்தப்பட வேண்டும்

## அரசியல் சாசன தமிழ் மகாநாட்டுக்கு வரும் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

**“நாட்டின் பரிபாலனத்திலும் சமூக வாழ்விலும் தமிழும் சிங்களமும் உபயோகிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் சகல மக்களிடையேயும் சமத்துவத்தை ஏற்படுத்துவதுடன், தேசிய ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்த முடியும்.**

**யாழ். நகரமண்டபத்தில் நாளைக்காலை நடைபெறவிருக்கும் அரசியல் சாசன நகல்திட்டம்பற்றிய தமிழ் மகாநாட்டில் மேற்கண்ட பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

தமிழ்த் தலைவர்களின் ஒரே கருத்தைச் சமர்ப்பிக்கும் நோக்கமாக இம்மகாநாடு கூட்டப்படுகிறது. சகல கட்சியினருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

முன்னுள் பேராசிரியர் திரு. கு. நேசையா, திரு...

...மான அடிப்படையுரிமைகள் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது.

அடிப்படையுரிமைகள் சமுதாய அரசியல் உரிமைகளில் தனிமனிதரின் சமத்துவத்தை நிலைநிறுத்துவது...

...லைகளைக்கொண்ட திட்டத்தினைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்

பண்டைக்கால அரசியலமைப்பிலிருந்து தோன்றிய ஈழத்திருநாடு. வாக்களிக்கும் ஜனநாயகத்தையன்றி மக்கள் பங்குபற்றும் ஜனநாயகத்தை...

## சென்னையில் கெனமன்

சென்னை, செப். 13

இலங்கை வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் இன்று தமிழ்நாடு வந்து சேர்ந்தார். திரு. கெனமனுடன் இந்தியாவில் வீடமைப்பு முறைகளை நேரில் கண்டறிவதற்காக சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் சிலரும் வந்துள்ளனர்.

இன்று திரு. பீட்டர்கெனமன் தமிழ்நாடு கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியனைச் சந்தித்துப் பேசும்போது கொழும்பில் அமைக்கப்படவுள்ள 2500 வீடுகள் பற்றிய திட்டங்களைப் பற்றி குறிப்பிட்டார்.

மீசாலை ம[illegible] கொலைவழக்கு

## தோல் கூட்டுத்தாபன அறிக்கை நிறைவேறியது

கொழும்பு, ஞாயிறு

தோல் பொருள் கூட்டுத்தாபன ஆண்டறிக்கையை இன்று மக்கள் பிரதிநிதிகள் சபை ஏற்றுக் கொண்டது.

இது சம்பந்தமான விவாதத்தில் திரு. ஜே. ஆர். ஜயவர்தன பேசுகையில் நாட்டுக்கு லாபம் தரும் கைத்தொழில்கள் பலவும் தமது காலத்திலேயே நிறுவப்பட்டன என்று குறிப்பிட்டார்.

திரு. எம். பி. மெண்டிஸ் பேசுகையில் ஆங்கிலேயர்கள் இலங்கையை ஒரு விவசாய நாடாக[illegible] கருதி வந்தனர். அவர்கள் கருத்தையே திரு. டி. எஸ். சேனநாயக்கா போன்றவர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனல் 1956-ம் ஆண்டுக்குப் பின்னர்தான் நாடு தொழில் துறைகளில்வளர ஆரம்பித்தது என்றார்.

இந்த கூட்டுத்தாபனத்தின் முன்னுள் தலைவராக விருந்த திரு. ருேபின் ரட்ணம் நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் ஒரு இணைப்புப் பாலமாக விருந்தார். அவரை முன்னைய அரசாங்கம் நீக்கிவிட்டது பெரிய இழப்பாகும் என்றார்.

புதிதாக ஆசிரியர் பதவிக...

## சந்தேக நபர்கள் இருவரும்

## இன்று

மட்டுவில், ஞாயிறு

வடமாநில கல்வியதிபர் வி. சங்கரலிங்கம் தலைமையில் இன்று மட்டுவில் மாவித்தியாலய சாரணர் இயக்கத்தின் 17-வது ஆண்டு விழா கொண்டாடப்படும்.

## ‘நாட்டுப்பாடல் மூலம் தமிழன் சிறப்பை உணர்த்தலாம்’

தாவடி, ஞாயிறு

“சங்கீதம், நடனம், சிற்பம் போன்ற கலைகளை ... யும் காணலாம்.”

இவ்வாறு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆராய்ந்துசிறப்புறத் திகழச் நடைபெற்று வந்த அண்ண...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

முன்னுள் பேராசிரியர் திரு. கு நேசையா, திரு வி. பசுபதி ஆகியோர் அழைப்புகளை தமிழ்ப் பிரமுகர்களுக்கும் தமிழ் எம் பி.க்களுக்கும் அனுப்பியுள்ளார்கள்

சுமார் 100-க்கு மேற்பட்ட பிரமுகர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகாநாட்டுக்கு வரும் தீர்மானங்கள் வருமாறு:

இம்மாநாடு ஈழத்திருநாட்டிற்குப் புதியதோர் அரசியல் யாப்பினை உருவாக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியில் ஈடுபட்டிருக்கும் யாப்பு விவகார அமைச்சரையும் அரசியல் நிர்ணயசபை அங்கத்தவர்களையும் முக்கியம் வாய்ந்த முடிவுகளைச் செய்யும் பொழுது அவற்றினைப் பெரும்பான்மை பலத்தினாலன்றி உள்ளார்ந்த நட்புறவோடு செய்து கொள்வதனையே கருத்திற் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது. இந்த நன்னோக்கத்தோடு யாப்பினை அணுகின் யாப்பு நாட்டின் சகல இனத்தவரினதும் ஏகோபித்த ஆதரவினைப் பெற்றுவிடுமென எதிர்பார்க்கலாம்.

நாட்டின் ஸ்திரமான நிலையை உறுதிப்படுத்தவும் யாப்பின் சிரஞ்சீவித்தன்மையைப் பேணவும் நியாய

அடிப்படையுரிமைகள் சமுதாய அரசியல் உரிமைகளில் தனிமனிதரின் சமத்துவத்தை நிலைநிறுத்துவதுடன் கலாச்சார அரசியல் உரிமைகளில் இனப்பிரிவுகளின் சமத்துவத்தை உறுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

அடிப்படையுரிமைகள் என்னும் அத்தியாயத்தில் பேச்சுச் சுதந்திரம் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் பத்திரிகா சுதந்திரம் கூட்டம் கூடும் சுதந்திரம் சங்கம் அமைக்கும் சுதந்திரம் முதலியவற்ருலான தனிமனித சுதந்திரத்தின் உரிமைகள் நிலைநிறுத்தப்படல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது

இந்தத் தசாப்தத்திலும் இனிவரும் தசாப்தத்திலும் அரசாங்கக் கொள்கையின் நகல் விஞ்ஞாபனமெனக் கருதக்கூடிய வழிகாட்டி நெறிகளை யாப்பிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென இம்மகாநாடுகேட்டுக்கொள்கிறது. தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்திவிடவும், ஜனநாயக சோஷலிசத்தினுல் நலன்புரி அரசை உருவாக்கவும், பொருளாதாரத்தை பரவலாக்கவும், மக்கள் பங்குபற்றும்ஜனநாயகத்தை உருவாக்கவும், கூட்டுறவு இயக்கத்தைத் தேசமெங்கும் உபயோகிக்கவும், புதிய சமுதாயத்தை உருவாக்க, கல்வித் திட்டத்தின் நோக்கத்தையும் அமைப்பினையும் சீர்படுத்தவும் ஒரு கால எல்

றிய ஈழத்திருநாடு. வாக்களிக்கும் ஜனநாயகத்தையன்றி மக்கள் பங்குபற்றும் ஜனநாயகத்தை வேண்டிநிற்கும் இக்காலத்தில் கிராம அடிப்படையில் அரசாங்கத்தைப் புனரமைத்தும் இவ்வடிப்படையில் ஏனைய ஜனநாயக நிறுவனங்களை ஏற்படுத்தியும் ஆட்சி இயலுக்கு உண்மையான தொண்டாற்றலாம்.

மக்கள் குழுக்கள் மக்களினுலேயே தெரிவுசெய்யப் (4-ம் பக்கம் பார்க்க)

மீசாலை மூதாட்டி கொலைவழக்கு

## சந்தேக நபர்கள் இருவரும் 17-ம் திகதிவரை றிமாண்டில்

மட்டுவில், ஞாயிறு

மீசாலை மூதாட்டி கொலை சம்பந்தமாக சந்தேக நபர்களான மீசாலையை சேர்ந்த ஏரம்பு தியாகராசா, மலைநாட்டை சேர்ந்த வெள்ளையன் பாலகிருஷ்ணன் ஆகிய இருவரும் இம்மாதம் 17-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மீசாலையில் முத்தையா, பெண் செல்லாச்சி, என்ற மூதாட்டியின் கொலை சம்பந்தமாக இரு சந்தேக நபரும் பொலிஸாரினுல் கைது செய்யப்பட்டனர்.

இக்கொலை சம்பந்தமாக மீசாலை பகுதியில் மற்றும் சிலர் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன் ஜீ. ஐ. எச். நந்தசேன, கஸ்டபிள்ரி. சி சந்திரரத்ன ஆகிய இருவரும் பளையிலுள்ள ஒரு கடையில் நள்ளிரவு 1 மணியளவில் சந்தேக நபரான பாலகிருஷ்ணனை கைது செய்தனர்.

கண்டியிலிருந்து கொண்டு வரப்பட்ட பொலிஸ்நாய் மற்ற சந்தேக நபரான தியாகரராசாவின் வீட்டிற்கு சென்றதை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

மேலும் இருவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி

## தமிழ் ஆலோசனைச் சபை மேலும் புதிய உறுப்பினர்

கொழும்பு, ஞாயிறு

தபால் தந்தி தொடர்பு அமைச்சர் திரு. செ குமாரசூரியர் தலைமையிலான தமிழ் ஆலோசனைச் சபையில் பின்வருவோர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். கலாநிதி சு. வித்தியானந்தன், ஜனுப் எம் எம் உவைஸ், திரு இராசிவலிங்கம், திரு ஆ வைத்திலிங்கம், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, திரு கே கணேஷ்.

இச்சபையின் ஏற்கனவே 'ஈழநாடு' ஆசிரியர் கே பி ஹரன். 'வீரகேசரி' பிரதம ஆசிரியர் கே வி வாஸ், 'தினகரன்' ஆசிரியர் கே சிவகுருநாதன், 'தினபதி' பிரதம ஆசிரியர் எஸ் டி சிவநாயகம் 'வீரகேசரி' ஆசிரியர் எஸ் சிவப்பிரகாசம், கே லக்ஷ்மண ஐயர். மு கணபதிப்பிள்ளை, கலாநிதி கே கைலாசபதி, கலாநிதி கே சிவத்தம்பி, 'டெயிலி மிரர்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த கே. முத்துக்குமார். இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குநர் சபை உறுப்பினர் எச் எம் பி முஹிதீன், 'தேசாபிமானி' ஆசிரியர் பிரேம்ஜி ஆகியோர் அங்கம் வகிக்கிருர்கள்

டது பெரிய இழப்பாகும் என்றூர்.

புதிதாக ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் ஏற்கனவே ஏதாவது தொழில்களில் இருப்பவராக இருக்கக்கூடாது என்ற விதியைமாற்றி பற்ருக்குறை வருமானமுள்ள தொழில்களிலுள்ளவர்களும் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்ய வசதிசெய்யவேண்டுமென்றும் கூறும் ஒத்திவைப்புப் பிரேரணையொன்றை கொழும்பு மத்தியதொகுதி எம்.பி யும் முன்னுள் அமைச்சருமான திரு ஆர். பிரேமதாஸா கொண்டுவந்தார்.

வேலையில்லாமலிருக்கிறவர்களுக்குதொழில்வசதிசெய்து கொடுப்பதே இப்பொழுது அரசாங்கத்தின் நோக்கம் என்றும் பற்ருக்குறைத் தொழில்களில் உள்ளவர்கள் களுக்கு அவர்கள் தொழில் செய்யும் இடங்களிலேயே பதவி உயர்வுகளுக்கு வழி செய்யப்படும் என்றும் அரசாங்கத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது

மாவட்ட நதிபதி திரு. கே. வைத்திலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

## பெரிவளவு முருகன் தேர்

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானை பெரியவளவு முருகன் கோவில் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறவிருக்கிறது.

......

## கலைவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

கொடிகாமத்தில் இன்று மாலை நடைபெற விருக்கும் முத்தமிழ் கலை விழா நிகழ்ச்சி விபரம் வருமாறு.

மங்கள வாத்தியம்: இசை வள்ளல் திரு கே எம் பஞ்சாபிகேசன் கோஷ்டியினர் விரிவுரை: 'இலக்கிய இன்பம்'- செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பாட்டு: செல்வன் எஸ் இ பத்மநாதன், முக வீணை: திரு பி வெல்லைச்சாமி, பாட்டு; இசைமணி திருமதி பூமணி இராசரத்தினம், யாழ்கலா ஷேத்திர மாணவிகளின் பரதநாட்டியம், பாட்டு: திரு ஏ ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி.

சங்கானை கலைச்செல்வி நாடக மன்றம் அளிக்கும் விஞசிபுத்திரன் என்ற நகைச்சுவை நாடகம் மெல்லிசை: யாழ் கண்ணன் கோஷ்டியினரி.

## தமிழின் சிறப்பை உணர்த்தலாம்

தாவடி, ஞாயிறு

"சங்கீதம், நடனம், சிற்பம் போன்ற கலைகளை ஆராய்ந்துசிறப்புறத் திகழச் செய்வதற்காக குழுவொன்றைப் பணித்துள்ளனர் அரசினர். சிங்கள நாட்டிலே நாட்டுப் பாடல் பாடும் முறை இன்னும் இருந்து வருகிறது, ஒருவர் கேட்கும் வினுக்களுக்கு மற்றவர் பதில் கூறும் வகையில் கற்ருேர்க்கும் மற்ருேர்க்கும் முக்கியமாகப் பாமர மக்கள் இலேசாக உணர்ந்து ரசிக்கக்கூடிய வகையில் கிராமியப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. பொது மக்களுக்கு நாட்டுப்பாடல்களில் அதிக கவர்ச்சியிருப்பதையும் காண முடிகிறது இப்போது இசையுலகில் முக்கிய வித்தியாசங்களையும் காணலாம்."

இவ்வாறு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்று வந்த அண்ணமலை இசைத்தமிழ் மன்ற இசைவிழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய முன்னுள் வடமாநில வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் கூறினூர்

"நாட்டுப் பாடல்களைப் பாடுவதால் தமிழ்மக்களுடைய சிறப்பை எடுத்து விளக்க முடியும். தமிழ்மக்களிடையே நாட்டுப்பாடல் பாடிய பல கவிஞர்கள் இருந்துள்ளார்கள். அவர்களின் பாடல்களையும் பாடுவதால் கிராமத்தின் சிறப்புக்களையும் அறிய வாய்ப்பாகும்" என்றும் அவர் கூறினூர்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு கிடைக்கும்புதியவசதிகள்

# தொழிற்சங்கத் தலைவர்கள் பாராட்டு

## இ. தொ. கா. அதிருப்தி

கொழும்பு, ஞாயிறு

தோட்டங்களுக்குள் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கத்தவர்களைச் சந்திப்பதற்காக நிர்வாகத்தினரின் அனுமதியின்றி சென்றுவருவதற்கு வசதி செய்யும் மசோதா மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது குறித்து பல்வேறு தொழிற்சங்கங்களும் அரசாங்கத்துக்குப்பாராட்டுத்தெரிவித்துள்ளன

ஒரு நூற்ருண்டுகாலகுறைபாடு ஒன்றை நீக்கியது குறித்து அரசாங்கத்தை பாராட்டவேண்டுமென்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமன எம் பி யுமான ஜனுப் அப்துல் அஸீஸ் கூறினுர்

சமசமாஜக்கட்சி ஆதரவிலுள்ள லங்கா தோட்டத் தொழிலாளர்யூனியன்காரியதரிசி திரு ஏ சோமபால கருத்து வெளியிடுகையில் தோட்டதொழிலாளரின் மேம்பாட்டுக்கான சரித்திரமுக்கியத்துவமான நடவடிக்கை இதுவாகும் எனறுர்

ஆனுல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியதரிசி இதுபற்றி கருத்து வெளியிடுகையில் தொழிலாளர்களின் அடிப்படை குடியிருப்பு உரிமைகளை இந்த மசோதா இன்னமும் மறுக்கவே செய்கிறது என்றும் தொழிலாளர்கள் தமது நண்பர்களை உறவினர்களை தோட்ட லயன்களில் இன்னமும் வரவேற்று உபசரிக்கும் உரிமையைப் பெறவில்லையென்றும் கூறினுர். தங்கள் சமர்ப்பித்த மகஜரை ஆரசாங்கம் உதாசீனம் செய்துவிட்டது என்றும் அவர் கூறினுர்.

(சி பி ஏ)

## சாம்பியா ஜனுதிபதி இலங்கை வருவார்

லுசாக்கா, செப் 13

சாம்பியா ஜனுதிபதி டாக்டர் கென்னத் கௌண்டாவை இலங்கைக்குவிஜயம் வசய்யுமாறு இலங்கைப்பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா கேட்டுள்ளார்

லுசாக்காவில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைப் பிரதமருக்கு சாம்பியா ஜனுதிபதி அளித்த விருந்தின் போது திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அழைப்பு விடுத்தார்

எதிர்வருந் ஜனவரிமாதம் சாம்பியாஜனுதிபதி சிங்கப்பூரில் நடைபெறும் சாம்பிராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்குச் செல்லும் வழியிலோ திரும்புகையிலோ இலங்கைக்குவருகை தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

## பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர் மன்ற தேர்தல்!

உடுப்பிட்டி, ஞாயிறு

நேற்றுக் காலை பருத்தித்துறை இ. போ. ச, பணியகத்தில் இ. போ. ச, ஊழியர் மன்றத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கான தேர்தல் மனுக்கள் யாழ், மாவட்ட தேர்தல் அதிகாரி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன.

பொறியியல் பகுதியைச் சேர்ந்த திரு. குமார்இராமகிருஷ்ணனும், திரு. க. சுப்பிரமணியமும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் அதிகாரி அறிவித்தார்.

எழுதுவினைஞர்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான வேட்பாளர் மனுக்களை டிப்போ செயலாற்று உத்தியோகத்தர் திரு. வி. சபாபதியும், முகாரி திரு. எம். குலேந்திரனும் தாக்கல் செய்தனர். பஸ் கண்டக்டர்கள் சாரதிகள் பிரிவிலும் பலர் அபேட்சகர் மனுக்களைத் தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பித்தனர்.

பொறியியல் பகுதியில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட இருவரும் தொழிலாளர்களால் வரவேற்கப்பட்டனர்.

## சந்நிதிக்கு விசேஷ பஸ் சேவை

உடுப்பிட்டி, ஞாயிறு

தொண்டமனுறு செல்வச் சந்நிதியில் நிறுவப்பட்டுள்ள தற்காலிக இ. போ. ச. காரியாலயப் பொறுப்பதிகாரியாக திரு வி சபாபதி நியமிக்கப்பட்டுள்ளார். பஸ்கள் தேவையான பாதைகளில் உடனுக்குடன் பஸ்சேவைகளை விஸ்தரிக்கும்பொறுப்பு வீதிப் பரிசோதகர் திரு. எஸ். செல்லையாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொறுமையை இழக்காமல் பஸ் குழுவினருடன் ஒத்துழைத்துச் சிறந்த சேவை நடைபெற உதவுமாறு டிப்போ அத்தியட்சகர் விடுத்துள்ள வேண்டுகோளொன்றில் கேட்டுள்ளார்.

கையெழுத்து மோசடி வழக்கு

# 'கையெழுத்திடுவதற்கான தேவை திரு. நடராசாவுக்கு ஏற்படவில்லை'

## திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சாட்சியம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

"திரு. சுந்தரலிங்கம் உதவி தேர்தல் அதிகாரி முன்னிலையில் ஆட்சேபம் தெரிவித்தபோது ஆட்சேபத்தை எழுத்துமூலம் சமர்ப்பிக்கும் படி கேட்கப்பட்டார். காலை 11 மணிக்கு பின்னர் தான் எழுத்து மூலம் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது திரு. சுந்தரலிங்கம் காலை 11 மணிக்கு முன்னர் தான் ஆட்சேபம் தெரிவித்தார் உதவிதேர்தல் அதிகாரி ஆட்சேபத்தை எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார் இதைத் தொடர்ந்து ஆட்சேபம் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டது."

கையெழுத்து மோசடி வழக்கில் சாட்சியமளித்த காங்கேசன்துறை ஆட்சி மன்ற உறுப்பிரான திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினூர் இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு டயஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது:

இவ்வழக்கில் கடந்த பொதுத்தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தினம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கையெழுத்தை பத்திரத்தில் வைத்து மோசடி செய்ததாக திரு. எஸ். நடராசா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம் புறக்டர் வி. ஏ! பி. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானூர்,

திரு, எஸ், ஜே, வி. செல்வநாயகம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

நான் நியமன தினத்திற்கு முதல் நாள் கையெழுத்திட்டேன் உதவி தேர்தல் அதிகாரியின் மேசையில் வைத்து நான் எந்த நியமன பத்திரங்களிலும் கையெழுத்திடவில்லை நான் இரண்டு நியமனபத்திரங்களில் கையெழுத்திட்டேன் எந்தப்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


**விற்பனைக்கு**

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள பாவித்த 25 ஸ்ரீ தொடர் இலக்க fபியட் டிருக்ரர் இரண்டு 1 ஸ்ரீ தொடர் இலக்க N. S. U. மாக்ஸ் மோட்டர் சயிக்கிள் விற்பனைக்கு உண்டு. திருச்செல்வம் அன் கோ, 41, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 2945

**திருமண அழைப்பு**

**செல்வராசா — பார்வதியம்மா**

நிகழும் 16-9-70 புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையிலான சுபவேளையில் நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியில் உள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் திருமணம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது நண்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அ. நடராசா (வைத்தியர்) யாழ். மாநகர சபை உறுப்பினர், மணமகளின் சிறிய தந்தை, 10, அரச வீதி, நல்லூர். 2947

**நாடகம் தேவையா**

திருவிழாக்கள், ஆண்டு விழாக்கள் மற்றும் எல்லா வைபவங்களையும் சிறப்பிக்க் சிறந்த நகைச்சுவை நாடகம்.

“லேடி ரைப்பிஸ்ட்”டை ஏற்பாடு செய்யுங்கள்.

எஸ். அருமைநாயகம்,
டைரக்டர்,
லேக்வியூ ஹோட்டல்.
2449 யாழ்ப்பாணம்,


உடுப்பிட்டி, சனி

துன்னாலை சதாசகாய மாதா தேவாலயத்தில் பூர்த்தி செய்யப்படாது குறையில் இருக்கும் திருத்த வேலைகளை நிறைவேற்றுவதற்குக் கத்தோலிக்க மக்கள் நிதியுதவி வழங்கி ஆதரவு தரவேண்டுமென்று கரவெட்டி கட்டளைக் குரவர் வண. யோ. சிங்கராய அடிகளார் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாலய உற்சவம் எதிர்வரும் 16-ம் திகதி ஆரம்பமாகி 4 தினங்கள் நடைபெறுமென்றும் வண. கட்டளைக்குரவர் தெரிவித்திருக்கின்றார்.


**வடமாகாண பட்டதாரிகள் கைத்தொழில் அபிவிருத்திச் சங்கம்**

வடமாகாணத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர்களிடையே (பட்டதாரிகளிடையே) கைத்தொழில் அபிவிருத்தி எண்ணங்களைச் செயல்முறையில் ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் மேற்படி சங்கமொன்று தாபிக்கவேண்டுமென்று பல பிரமுகர்கள் கருதுகின்றனர். சங்கத்தில் பங்கு பெற விரும்புவோர், ஆக்க ஊக்க அறிவுரை வழங்குவோர் கீழ்க்கண்ட வருடன் உடனே தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

திரு. கு. நந்தலால்நேரு,
198/10, A, பொன்னப்பா ஒழுங்கை
வண்ணார்பண்ணை.
மாநகரசபை
யாழ்ப்பாணம் 2447

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார் ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த

**இரு கோடுகள்**

2வது வெற்றி வாரம்

**ராஜா - யாழ்ப்பாணம்**

10-30, 2-30, 6-30, 9-45

பிரேம் நசீர், செம்மீன் ஷீலா, சாரதா, மது
மற்றும் பலர் நடித்த
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசு பெற்ற

**குலபாரம்**


வலைப்பந்தாட்டம்

# இளவாலை, கனகரத்தினம் வீராங்கனைகள் முதல்நாள் போட்டிகளில் வெற்றி

(நமது விளையாட்டு நிருபர் 'தேவா')

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். பொலிஸ் விளையாட்டு வார விழாவை முன்னிட்டு 'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும், பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம், யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

இப்போட்டியை பெருந்திரளானமக்கள் கண்டுகளித்தனர். மைதானத்தைச்சுற்றி வாலிபர் கூட்டமே கூடுதலாகக் காணப்பட்டது.

### இளவாலை வெற்றி

முதல் போட்டி யாழ்ப்பாண ஆங்கிலக் கொன்வென்டுக்கும், இளவாலை கொன்வென்டுக்குமிடையில் நடைபெற்றது இப்போட்டி இடைவேளைவரை மிகவேகமாகவேநடைபெற்றது. இரு கோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல், மாறிமாறி புள்ளிகளை சேகரித்தவண்ணமே இருந்தனர். ஆனாலும்இடைவேளையின்போதும் இளவாலைக் கொன்வென்டே 1—8 புள்ளிகள் வித்தியாசத்தால் முன்னணிவகித்தது.

இடைவேளையின்பின் இளவாலைகொன்வென்ட் வீராங்கனைகளின் வேகமான முன்னேற்றத்தை யாழ். கொன்வென்ட் வீராங்கனைகளால் தடுத்து நிறுத்தமுடியவில்லை இளவாலைக் கோஷ்டியினர் அடுத்தடுத்து புள்ளிகளை பெற்றவண்ணமே இருந்தனர். இவர்கள் ஆட்டம் முடிவடையும்போது 21—12 புள்ளிகள் வித்தியாசத்தால் யாழ். கொண்வென்ட்கோஷ்டியைத் தோற்கடித்தனர்

இப்போட்டிக்கு திருமதி எல். பலசிங்கமும், செல்வி எஸ் தர்மலிங்கமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

### கனகரத்தினம் வெற்றி

கனகரத்தினம் மத்திய மா வித்தியாலயத்துக்கும், அரியாலை யுனைட்டட் கழக வீராங்கனைகளுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் கனகரத்தினம் வீராங்கனைகள் மிகஇலகுவாக எதிர்க் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

இப்போட்டி தொடங்கி முடிவடையும்வரை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய கோஷ்டியினர் புள்ளிகளை ஒன்றின்பின் ஒன்றாக சேகரித்தவண்ணமே இருந்தனர். இவர்கள் இடைவேளைவரை 13 புள்ளிகளைப் பெற்றிருந்தார்கள், ஆனால் அரியாலைக்கோஷ்டியினர் இடைவேளைக்கு இருநிமிடங்கள் இருக்கும்போது ஒரு புள்ளியை மட்டுமே பெற்றார்கள்.

இந்தப்போட்டியில் அரியாலைக்கோஷ்டியினர் கூடுதலாக புள்ளிகளைச் சேகரிக்கும் கட்டங்களை நழுவவிட்டதினாலேயே தோல்வியடைந்தார்கள். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயக் கோஷ்டியினர் இடைவேளைக்கு முன்பாகவே தமது வேகமான முன்னேற்றத்தினால் எதிர்க் கோஷ்டியினரைச் சோர்வடையச் செய்துவிட்டனர். இக்கோஷ்டியின் வீராங்கனை செல்வி ஞானவதி மிகச்சாதுரியமாக விளையாடி தமது கோஷ்டியினருக்கு கூடுதலான புள்ளிகளைச் சேகரித்துக்கொடுத்தார். இதே கோஷ்டியின் வீராங்கனை செல்வி சந்திரேஸ்வரி எதிர்க் கோஷ்டியினரிடமிருந்து மிக சாமர்த்தியமாக பந்தைப் பறிப்பதில் முன்னணியில் திகழ்ந்தார். இவர் ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை மிகத்துரிதமாக விளையாடி ரசிகர்களின் கவனத்தைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டார்.

ஆட்டம் முடிவடையும் போது கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 27 3 புள்ளிகள் வித்தியாசத்தால் எதிர்க்கோஷ்டியினரைத் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திருமதி எம தம்பிநாயகமும், செல்வி எஸ் தர்மலிங்கமும் மத்தியஸ்தர்களாகக்கடமையாற்றினார்கள். (தே.நி)

## விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டி சிவ கணேஷ விளையாட்டுக் கழகத்தாரின் 15-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி இம் மாதம் 22ம் திகதி நடைபெற விருக்கிறது. காலை 6.30 மணிக்கு 25 மைல் சைக்கிளோட்டப்போட்டியும் விநோதஉடைப்போட்டியும் நடைபெறும் மாலை இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி நடைபெறும் பிரதம விருந்தினர்களாக திரு. பொன்னம்பலமும். திரு ஆர். ஆர் தர்மரத்தினமும் கலந்து கொள்வார்கள். வடமராட்சி ரீதியிலான மல்யுத்தப் போட்டியும் இடம்பெறும். சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் சிவ கணேஷ விளையாட்டுக் கழகத்தாருடன் தொடர்பு கொள்ளலாம்.

கொடிகாமத்தில்

## முத்தமிழ் கலை விழா

யாழ்ப்பாணம், திங்கள்

கொடிகாமம் சேர் பொன் இராமநாதன் கழகத்தின் முதலாம்ஆண்டு முத்தமிழ்க் கலைவிழா இன்றுமாலைநடைபெறவிருக்கிறது. கொடிகாமம் கச்சாய் வீதியிலுள்ள சித்திரவேலாயுத கந்த சுவாமி கோவிலின் முன் அமைக்கப்பெற்ற இராமநாதன் அரங்கில் திரு சி செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக திரு வெ. சங்கரலிங்கம் கலந்து கொள்கிறார்.

'இலக்கிய இன்பம்' என்னும் பொருள்பற்றி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விரிவுரையும் இசை அரங்கும் நடன அரங்கும், நாடகஅரங்கும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெறும், (கு வி,ம)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 14—9—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 வாத்தியஇசை, 7-15 வயலின், 7-45 திரை

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 29ம் திகதி (14-9-70)

மேஷம்: விளை பொருள் விருத்தியுடன் விருந்திற்கும் இடம்உண்டு. தாய்வழித் தலைமுறை ... கிடைக்கும்.

ரிஷபம்: உள்ளம் இன்

## 'கூட்டுறவுத் திட்டங்களை அரசுபாதுகாக்க வேண்டும்'

கைதடி ஞாயிறு

“கூட்டுறவு அடிப்படைத் திட்டங்களை அரசாங்கம் பாதுகக்கவேண்டும். அதன் நிர்வாகத்திற்குள் நுழையாமல் அரசாங்கம் எட்ட இருந்து கண்காணிக்கவேண்டும். அப்பொழுதுதான் கூட்டுறவு நாட்டுறவாகி நல்ல பயனைத்தரும்”

கைதடி மகாவித்தியாலயத்தில் திரு என். பொன்னம்பலம் தலைமையில் நடந்த கூட்டுறவுக் கருத்தரங்க விழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்

“ஒரு சில முதலாளிகளினதும் தரகர்களினதும் பிடியிலிருந்து பொதுமக்களை விடுவித்து நாட்டு மக்கள் அனைவரும் நலமடைய வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தோடு - அடிப்படைத் திட்டத்தோடுதான் கூட்டுறவு இயக்கங்கள் ஆரம்பமாகின. அதன் அடிப்படைத்திட்டத்தை என்றும் அரசாங்கம் இன்னும் அனுபவரீதியாகக் காணக்கூடியதாக இருக்கிறது. எனவும் குறிப்பிட்டார். கருத்தரங்கில் பங்கு கொண்ட அனைவருக்கும் மதிய போசனமும் வழங்கப்பட்டது.

## ஸ்ரீ. ல. சு. க. விடம் நுவரெலியா மாநகரசபை

கோட்டை சனி

நுவரெலியா மாநகரசபை முதல்வராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த திரு. டி. வில்லியம் பெர்ணாண்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளார் உபதலைவராக திரு. டேவிட் அப்புகாமி தெரிவுசெய்யப்பட்டார்.

புதிய முதல்வர் திரு. வில்லியம் பெர்ணாண்டோ முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினராவர்,


**அடிக்கு ரூ. 15-00 வீதத்திற்குமேல் சேமியுங்கள்**


உள் உறுஞ்சி வெளிவிடும் பைப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள அல்கதீன் பாவிப்பதன் மூலம் சேமியுங்கள்.

தண்ணீர் அடிமட்டம் குறைந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்.

நீங்கள் விரும்புவதற்கான காரணங்கள்:—

1. வளைந்துகொடுக்கும் தன்மை—சுருள்போல் வளைந்துகொடுக்கக்கூடிய அல்கதீன் எந்த நீர் பாய்ச்சு முறைக்கும் உகந்தது.
2. சிறந்த செயல்முறை—அமுக்க வேலைகளுக்கும் ஆகர்ண சக்தி உள்ள வேலைகளுக்கும் நேர்த்தியானது.
3. சிக்கனமானது—அல்கதீன் நீடித்துழைப்பது. மற்றைய தயாரிப்புகளைவிட மிகவும், மிகவும் மலிவானது.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்.
தபாற்பெட்டி நிர், 352, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசு பெற்ற

# துலாபாரம்

(மலையாளம்)

(எஸ் ரி. ஆர். பிலிம்ஸ்)



யாழ் - வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன், ஜெய்சங்கர், ராஜஸ்ரீ, நிர்மலா

நடித்த

# பூவா தலையா




கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ் நகர்

(2-30, 6-30, 9-30)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.

உணர்ச்சி ஒவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

★ ஏ வி.எம்.ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாமணி

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


...பரப்பு, 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 ஒடி விளையாடு பாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 வாத்தியஇசை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

---

## அளவெட்டி இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

அளவை இசைக்கலை மன்றத்தின் இசைவிழா 3-ம் நாளாகிய இன்றைய நிகழ்ச்சிகளுக்கு டாக்டர் ரி. ஜெகநாதரன் தலைமை வகிப்பார்.

மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் செல்வி ஞானகுமாரி தங்கராசா, திரு. எஸ். கணபதிப்பிள்ளை, திருமதி சரஸ்வதி பாக்கியராசா ஆகியோரின் இன்னிசைக்கச்சேரிகள் இடம்பெறும். இறுதி நிகழ்ச்சியாக திருநெல்வேலி நாட்டிய கலாலயத்தினரின் நாட்டியக்கச்சேரி இடம்பெறும்.


வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

போயா, பிரீபோயா 2-30

நாகேஷ் — கே ஆர். விஜயா

நடித்த

சர்வர் சுந்தரம்



ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா, பிரீ போயா 2-30

சிவாஜி — ஜமுனா

நடித்த

மருதநாட்டுவீரன்



MANOHARA

Jaffna

Daily: 4 45, 7&9-45 p. m.

Poya, Prepoya 4 Shows

THE PSYCHOPATH

(Scope color)

(Strictly for Adults)



REGAL

Jaffna

Daily: 4-45, 7&9-45 p m

Poya, Prepoya 4 Shows

BEAUTIES BY NIGHT

Adults only)


...விளைபொருள் விருந்தியுடன் விருந்திற்கும் இடம்உண்டு. தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும்.

ரிஷபம்: உள்ளம் இன்பத்தில் துள்ளும். பிள்ளை ஒன்றின் கல்விமுன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

மிதுனம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். திடசித்தம் வேண்டும்.

கடகம்: நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்பட முடியும். சுகபோகநாள்.

சிம்மம்: அரசபயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். நிதானம்வேண்டும்.

கன்னி: நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்கள் உதவிக்கு வருவர். புண்ணிய விருப்பும் மேலிடும்.

துலாம்: வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும். தொழில்துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

விருட்சிகம்; புதியதொழில் முலம் லாபம் கிடைக்கும். பூமியால் முன்னேற்றம் உண்டு.

தனுசு: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்வீர்கள், எதிலும் அவதானம் செலுத்தவும்.

மகரம்: அவசர முடிவின் மூலம் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவீர்கள். அடக்கம் விரும்பத்தக்கது.

கும்பம்: குடும்ப நலனில் புதிய உற்சாகம் பிறக்கும் வசீகரப் பேச்சு வெற்றியைத் தேடித்தரும்.

மீனம்: சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும் உஷாராக இருக்க வேண்டும்.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

---

...வரும் நலமடைய வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தோடு - அடிப்படைத் திட்டத்தோடுதான் கூட்டுறவு இயக்கங்கள் ஆரம்பமாகின. அதன் அடிப்படைத்திட்டத்தை என்றும் அரசாங்கம் பாதுகாக்கவேண்டும்.

கூட்டுறவினால் நாடுவளம் பெறுவது மட்டுமல்ல, பல சமுதாயப் பிரச்னைகளைக் கூட கூட்டுறவு தீர்த்து வைக்குமென்பதை நாம்

## விசேஷ பயிற்சி

உடுப்பிட்டி, ஞாயிறு

டாக்டர் த. வாமதேவன் டாக்டர் திரு. இந்திராரசா ஆகிய இருவரும் உயர்பயிற்சி பெறுமுகமாக இந்தியா செல்கின்றனர். இவ்விரு டாக்டர்களும் உபகாரச் சம்பளம் பெற்று 3 மாதகாலம் பயிற்சி பெறுவர்.

......

## "புனித ஸ்தாபனமாக திகழவேண்டும்"

உடுப்பிட்டி, ஞாயிறு

'பொதுமக்களின் சேவையொன்றையே இலட்சியமாகக் கொண்டு நெல்லியடிப் பட்டினத்தை முன்னேற்றவேண்டும். நெல்லியடிப் பட்டினசபையைச் சுயநலக் கலப்பற்ற ஒரு புனித ஸ்தாபனமாகத் திகழச்செய்யவேண்டும். பொதுமக்களுக்கு எது தேவையோ அதனையே கருத்திற்கொண்டு செயலில் ஈடுபடவேண்டும்''

இவ்வாறு நெல்லியடி பட்டினசபையின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. எஸ். பி. தேவசகாயம் ஜே. பி. யையும் உபதலைவராகத்தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. கே ஐயாத்துரையையும் பாராட்டி அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் முன்னாள் உபசபாநாயகரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளருமான திரு. மு சிவசிதம்பரம் ஆலோசனை கூறியுள்ளார்.





அறவே களைகளை அழிக்குமென நிரூபிக்கப்பட்ட சேர்கோப்பூர் 36%, 3.4 டீ.பீ.ஏ. கொண்டது. 35% முதல் 75% வரை அது விளைச்சலைப் பெருக்கும். நெல் விதைத்து 7-21 நாட்களுள் அதைப் பாவிக்க வேண்டும்.

இக் களைகொல்லியைத் தெளிப்பது மிகச் சுலபம்; மிகச் சிக்கனம்.

சேர்கோப்பூர், பேயர் விவசாய இரசாயனப் பொருள். பேயர் பொருள்கள், ஜெர்மனியில் 100 வருட தொழில் நுட்ப ஆராய்ச்சியின் ஆதாரம் கொண்டவை.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - சேர்கோப்பூர். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

பசளையைக் களை தின்று விளைச்சலைக் குறைக்கிறதா?




# சேர்கோப்பூர் 36%

களைகளைக் கொல்கிறது

BAYER ®

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:

பேயர்

மேற்கு ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்பவர்:

ஹேக்கெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10.

P. 9152 P.



6½ ஹோஸ்பவர் தொடக்கம் 20 ஹோஸ்பவர் வரையுமுள்ள



ஜோன்சன் அவுட்போட் மோட்டர் உதிரிப்பாகங்களும்

பேக்கின் P3 மரீன் இன்ஜின் உதிரிப்பாகங்களும்

எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# விஷ்ணு ஹாட்வெயார்ஸ்ரோஸ்

57, யாழ்ப்பாணம் வீதி, (போன்: 34) வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரபுக்கொமாண்டோக்கள்

# திசை திருப்பிய விமானங்களை வெடிவைத்துத் தகர்த்தனர்

## பிரயாணிகளில் 40 பேர் இன்னமும் காவலில்

அம்மான், செப் 13

ஜோர்டானிய பாலைவனத்தில் வைககப்பட்டிருந்த விமானங்கள் மூன்றையும் பாலஸ்தீன தீவிரகொமாண்டோக்கள் நேற்று அழித்தனர்.

பாலஸ்தீன தீவிர கொமாண்டோக்களினல் திசை திருப்பப்பட்டு ஜோர்டானிய பாலைவனத்தில் வைக்கப்பட்டிருந்த மேற்கத்திய நாடுகளுக்குச் சொந்தமான விமானங்கள் மூன்றையும் கொமாண்டோக்கள் அழித்ததையிட்டு பல நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தீவிர கொமாண்டோக்களின் இச்செயல் சர்வதேச கட்டுப்பாட்டுக்கு முரணனதும் மனிதத்தன்மை அற்றது எனவும் ஜோர்டானிய பிரதமர் தெரிவித்ததாக அம்மான் வானெலி தெரிவித்தது.

பாலஸ்தீன கொமாண்டோக்களின் இவ்வித தீவிர நடவடிக்கை அரபு விடுதலைக்கு பங்கம் விளைவிப்பதோடு சர்வதேச நாடுகளின் கருத்துக்களை அரபுக்களுக்கு எதிராக திசை திருப்பக் கூடியதுமாகும் என நேற்று அம்மானில் அவசரமாகக் கூடியபின் அரபு விடுதலை முன்னணியின் மத்திய குழு தெரிவித்துள்ளது.

அம்மானில் நேற்று அவர்கள் விடுத்த அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பாலஸ்தீன தீவிர கொமாண்டோக்களின் அத்தகத்துவத்தை நாங்கள் நீக்கியுள்ளோம். இவர்களுடன் இனி மேல் எதுவித தொடர்பும் கொள்வதில்லை என எமது முன்னணி முடிவு செய்துள்

கடத்தப்பட்டு ஜோர்டானிய பாலைவனத்தில் வைக்கப்பட்டிருக்கும் பிரயாணிகள் எல்லோரையும் பாகுபாடின்றி விடுதலை செய்தால் பிரிட்டனில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பாலஸ்தீன கொமாண்டோ பெண் லைலா சாதிக்கை விடுதலைசெய்ய பிரிட்டன் தயாராக இருக்கிறதென இன்று லண்டனில் அறிவிக்கப்பட்டது.

## இராணுவ துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறுவன் பலி; பலர் காயம்

கல்கத்தா, செப். 13

மேற்கு வங்காளத்தில் ராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறுவன் இறந்தான், பலர்காயமடைந்தனர். கல்கத்தாவிற்கு அண்மையிலுள்ள இரண்டு கிராமங்களில் நக்சல்பாரிகளின் வன்செயல்களை அடுத்தே இராணுவத்தினர் இத்துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

மேற்கு வங்காளத்தில் நக்சல்பாரிகளின் பயங்கரத் தன்மைகளை அடக்குவதற்கு மேற்கு வங்காள அரசு அதிக அதிகாரங்களை எடுத்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இருந்த 1932-ம் ஆண்டு வங்கப்பயங்கரச் சட்டங்களை எடுக்கும் சட்டத்தை செயல்படுத்த வங்காள அரசு முடிவு செய்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்ததன்பின் மத்திய அரசின் அனுமதியுடன் இச் சட்டம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. என பிரதம காரியதரிசி திரு. மல்லிக் தெரிவித்தார்.

இச்சட்டத்தின் கீழ் பயங்கரச் செயல்களுக்கு ஊக்கமளிக்கும் நூல்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள் ஆகியவற்றை பொலிசார் கைப்பற்றவும் இடமுண்டு.

## நெடுஞ்செழியன் அமெரிக்கா செல்வார்

சென்னை, செப்.13

தமிழ்நாடு கல்வியமைச்சரும் தி. மு. க. பொதுச் செயலாளருமான இரா. நெடுஞ்செழியன் இம்மாதம் 17ம் திகதி அமெரிக்கா விற்குச் செல்வார். அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றுச் செல்லும் அவர் அங்கு மூன்று வாரகாலம் தங்கி அமெரிக்காவின் கல்வி நிலையங்கள், சுகாதார நிலையங்களின் வளர்ச்சி, செயல் முறை பற்றி அறிவார்.

திரு. நெடுஞ்செழியன் அமெரிக்கா போகும் வழியில், பிராவ்பர்ட், பேர்லின் லண்டன், பாரிஸ் ஆகிய இடங்களுக்கும் செல்வர்.

சர்வதேச தமிழ் ஆராய்ச்

நேதாஜி

## மரணவிசாரணைக் குழுவில் செழியன்

புதுடில்லி, செப். 13

நீதியரசர் ஜீ டி. கோஸ்லாவை நேதாஜி மரணம் பற்றி விசாரிக்க நியமித்துள்ளது. இவருக்கு உத யா

மாநில சுயாட்சி

## மகாநாட்டுப் பந்தலின் முன் ஆர்ப்பாட்டம் செய்தோர் கைது

சென்னை, செப் 13

'மதருஸ் ஆகாஷ்வாணி என்பதை சென்னைவானெலி நிலயம் என பெயர் மாற்றம் செய்ய மறுத்தால் மந்திரிகள் வானெலி நிகழ்ச்சி கலந்துகொள்ளப் போவதில்லை'

நேற்று சென்னையில் நடந்த மாநில சுயாட்சி மகாநாட்டில் தலைமைவகித்துப் பேசுகையில் தமிழ் நாடு முதலமைச்சர் கருணநிதி மேற்கண்டவாறு கூறினர்.

இம் மகாநாட்டில் மேற்கு வங்க முன்னுள் முதலமைச்சர் அஜார் முகர்ஜி பேசுகையில், மாநிலங்களுக்கு கூடாக அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். ஆனல், அமெரிக்கா போல முழு அதிகாரத்தையும் அளிக்கக் கூடாதென்ருர்.

மாநில சுயாட்சி கோரிக்கை, தனிக் கொடிக் கோரிக்கை ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக சென்னையில் நடைபெறும் மாநிலசுயாட்சிமகாநாட்டுப் பந்தலின் முன் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பலர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்களை பொலிசார் உடனடியாக கைது செய்தனர்.

நாட்டின் ஒற்றுமைக்கும், தேசியத் தன்மைக்கும் கேடு விளைவிக்கும் தனிக்கொடிக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் தாம் போராட்டம் நடத்தப் போவதாக ஜன சங்கத் தலைவர் இன்று பம்பாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

சின்னமடு

## ஐப்பசி உற்சவம்

நாரந்தனை, ஞாயிறு

தீவுப்பகுதி யாத்திரை ஸ்தலங்களில் ஒன்ருன சின்னமடு செபமாலை மாதா தேவாலய ஐப்பசிமாத உற்சவம் அடுத்தமாத முற்பகுதியில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஆயத்தங்களில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## புதிய வெளியீடு

லண்டன். செப்.13

ஆசியாவிலுள்ள பிரதான மதங்களையும் சமூக பழக்க வழக்கங்களையும் தெளிவுபடுத்தும் புதிய வெளியீடு ஒன்றை லண்டனிலுள்ள இன உறவுக் கமிஷன் பிரசுரித்துள்ளது. அது இந்து சமயம், இஸ்லாம், சீக்கிய மதம் ஆகியன பற்றி துல்லியமாக விளக்குகிறது.

பிரிட்டிஷ் நிர்வாகத்தினர் ஆசிய குடியேற்ற வாசிகளுக்கு மத விடுமுறைகள் வழங்கும் பொருட்டும் மதங்களினதும் பிரதான பண்டிகைகள் இதில் தரப்பட்டிருக்கின்றன. பிரிட்டனில் இன நல்லுறவைப் பலப்படுத்தும் நோக்கமாகவே இவ் வெளியீடு பிரசுரிக்கப் பட்டுள்ளதாக இன உறவுக் கமிஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூவர் கூட்டாகச் சேர்ந்து இந்த நூலை எழுதியுள்ளனர். சுரே சர்வகலா சாலையின் இந்து மத, ஆசிய கலாச்சார விரிவுரையாளரான திருமதி பெக்கி ஹொல் ரோய்ட், ஹடர்பீட் சர்வகலாசாலையில் ஆசிய மத விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஜனுப் முகமது இக்பால் பிரெட்போர்ட் தொழில் நுட்பக் கல்லூரியின் உருதுமொழி விரிவுரையாளரான திரு. தராம்குமார் ஆகியோரே இவ்வாசிரியர்களாவர்.

### அளவுக்கு மீறிப் பாடி

# ரசிகர்களை சினக்க வைக்காதீர்!

## பாடகர்களுக்கு 'சித்தூர்' புத்திமதி

தாவடி, ஞாயிறு

"தமிழ், தெலுங்கு, கன்னடம் என்னும் மொழிகளில் பாடுவதும் கர்நாடக இசைதான். கலைஞன் ஒருவன் இராகத்தைப் பாடும் போது, அளவுடன் பாடினல் ரசிக்கவும், அலுப்புத் தட்டாத வகையில் ரசிகர்கள் அனுபவிக்கவும் முடியும் கூடுதலான சங்கதிகளை எல்லாம் கொடுத்துப் பாடுகின்றபொழுது ரசிகர்கள் சினமடையவும் கூடும் அத்துடன் 'சுரம்—ராகம்' பாடும்பொளுது கச்சிதமாக இருந்தால் சிறப்பாகவும் இருக்கும். சுருதி லயசுத்தமாகப் பாடுதல் முக்கியம்."

மேற்கண்டவர்று சங்கீத பூஷணம் செல்வன்சி பத்மலிங்கத்தின் இசை அரங்கேற்றத்தில்கலந்து தலைமையுரையாற்றிய இசைப்பேராசிரியர் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை கூறினர்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் அண்ணமலை இசைத் தமிழ் மன்ற இசை விழாப் பந்தரில், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின ஆசியுரையுடன் ஆரம்பமாகிய இவ்வைபவத்தில்மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:

'இந்தியாவில் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் இசைபயின்று இப்போது ஈழத்தில் கலைத்தொண்டு புரிபவர்கள் பலர். அனுபவமிக்க வித்துவானெருவர் பாடுவதுபோல மிக அமைதியான முறையில் அனுபவித்துப் பாடினர் செல்வன் பத்மலிங்கம்'என்ருர்,

நடன ஆசிரியரும் கவிஞருமாகிய இணுவில் என். வீரமணி ஐயர் பேசுகையில் கூறியதாவது:-

'இந்தியாவில் உள்ள அண்ணமலைப் பல்கலைக்கழகத்தின் நாமத்தைச் சூட்டி இயங்கிவரும், யாழ். அண்ணமலை இசைத் தமிழ் மன்றத்தில் இந்த அரங்கேற்று விழா நடைபெறுவது யாழ்ப்பாணத்தின் இசைவளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகவும் அமைகின்றது. சங்கீத பூஷணம் செல்வன் பத்மலிங்கத்தின் ஆரம்ப குரு நானே என்பதையிட்டு அகமகிழ்கின்றேன். அவருடைய கலைத்தொண்டு மேன்மேலும் சிறப்படைவதாகுக" என்ருர்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் தமது உரையின் போது "ஏழிசையாய் இசைப்பயனுய் இருக்கும் இறைவன் புகழ்பாடிய ஞானசம்பந்தப்பெருமானின் இவ் ஆதீனத்தில் இவ் இசையரங்கேற்று விழா நடைபெறுவது சிறப்புடையது' என்ருர்.

வித்துவான் பிரம்மஸ்ரீ வேணுகோபாலய்யர் இந்தியாவில் இருந்து அன்பளிப்பாக அனுப்பிய பொன்னுடை ஒன்றையும் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை சங்கீத பூஷணம் பத்மலிங்கத்துக்குப் போர்த்திக் கௌரவித்தார். திரு. பரம் தில்லைராசாவும் பேசினர்.

......

## சம்பளம் நின்றதன் காரணம் என்ன?

மட்டுவில், ஞாயிறு

'ஆறுமாத காலமாகக் கொடுக்கப்பட்டுவந்த எமது சம்பளம் திடீரென நிறுத்தப்பட்ட காரணம் என்ன?'

இவ்வாறு சாவகச்சேரி நகரசபை மின்சார நிலையப் பயிற்சியாளர் கவலை தெரிவிக்கிருர்கள்.

தம்மை ரூபா 75 பிணைப் பணத்துடன் வேலைக்குச் சேர்த்துக் கொண்டனர் என்றும் மாதா மாதம் 75 ரூபா சம்பளம் தரப்பட்டதாகவும் ஆனல் கடந்த 6 மாதங்களுக்கு மேலாகக் கொடுக்கப்பட்டுவந்த சம்பளம் இம்மாதம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறுகிருர்கள்.

இவர்களை ஆணையாளரின் அனுமதி பெறமுன்பு வேலைக்குச் சேர்த்துக் கொண்டதாகவும் இப்பொழுது நடைபெற்றுவரும் கணக்குப் பரி

போர்ஹான்ஸ்
புன்னகைப் புதிர்
போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோக்களின் ஆதிக்கத்து வத்தை நாங்கள் நீக்கியுள்ளோம். இவர்களுடன் இனிமேல் எதுவித தொடர்பும் கொள்வதில்லை என எமது முன்னணி முடிவு செய்துள்ளது. இத்தீவிரக் கொமாண்டோக்களின் நடவடிக்கை சஞுசிஸம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றிற்கே உதவி செய்யும் எனக் கூறியுள்ளது.

இவ்விமானங்களில் பிரயாணம் செய்தவர்கள் யாவரும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என ஒரு செய்தி தெரிவித்தது. அமெரிக்கா, சுவிற்சலண்ட், மேற்குஜெர்மனி, பிரிட்டன், இஸ்ரேல் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 40 பிரயாணிகளைத் தவிர்ந்த ஏனையோர் யாவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என பாலஸ்தீன கொமாண்டோக்கள் தெரிவித்தனர். மேற்கத்திய நாடுகளில் இருக்கும் ஏழு கொமாண்டோக்களையும் விடுதலைசெய்தால் இவர்களை விடுதலை செய்வார்கள் என மேலும் அவர்கள் தெரிவித்தனர். இந்த 40 பிரயாணிகளில் இஸ்ரேலைச் சேர்ந்த பெண்மணிகளும் இருக்கின்றனர்.

திசை திருப்பப்பட்ட விமானங்களில் இருந்த இந்தியப் பிரயாணிகள் 19பேரும் லண்டன் போய்ச் சேர்ந்தனர். இவர்கள் பிரயாணம் செய்த விமானமும் அழிக்கப்பட்ட விமானங்களில் ஒன்றாகும்.

திரு. நெடுஞ்செழியன் அமெரிக்கா போகும் வழியில், பிராங்பர்ட், பெர்லின் லண்டன், பாரிஸ் ஆகிய இடங்களுக்கும் செல்வர்.

சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக் கழகம் அமைப்பதுபற்றி யூனெஸ்கோ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். ......

## ரஷ்யாவில் 56 மொழிகளில் கல்வி போதனை

மாஸ்கோ, செப். 13

1970-ம் ஆண்டில் கல்விக்காக சோவியத் யூனியன் 2450 கோடி ரூபிள்களை ஒதுக்கியுள்ளது என்று சோவியத் கல்வி அமைச்சர் பேராசிரியர் மிக்காயில் புரகோபியேவ் சொன்னார்.

இப்போது சோவியத்யூனியனில் 178000 பொதுக்கல்விப்பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 56 மொழிகளில் கல்வி போதிக்கப்படுகிறது. தொழிலாளர்கள் 5000 தொழில் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். 4000க்கும் கூடுதலான நடுநிலை தொழில் நுட்பக் கல்லூரிகளும், 8000 உயர்கல்வி நிலையங்களும் உள்ளன. சோவியத் யூனியனில் கல்வி பயிலும் மாணவர்கள் தொகை 790 லட்சமாகும். அதாவது ஒவ்வொரு மூன்றாவது பிரஜையும் கல்வி கற்கிறார்.

## ...குழுவில் செழியன்

புதுடில்லி, செப். 13

நீதியரசர் ஜீ. டி. கோஸ்லாவை நேதாஜி மரணம் பற்றி விசாரிக்க நியமித்துள்ளது. இவருக்கு உதவியாக 55 பேர் கொண்ட கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கமிட்டியில் தி. மு. கவைச் சேர்ந்த இரா. செழியன், சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த என் ஜி ரங்கா, முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த இஸ்மாயில் சாகிப் வாஜ்பாய் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

---

## விண்ணில் ரஷ்யாவின் லூனா-16

மாஸ்கோ, செப். 13

ரஷ்யா சந்திரனை ஆராய்வதற்கு மனிதன் இல்லாத லூனா-16 என்னும் செயற்கைக்கோள் ஒன்றை அனுப்பியுள்ளது என சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் அறிவித்துள்ளது.

இக்கோள் சந்திர மண்டலத்திலுள்ள பூகால நிலைகளையும் மாற்றங்களையும் ஆராயுமென அறிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஜூலைமாதத்திற்குப்பின் ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பிய முதலாவது செயற்கைக்கோள் இதுவேயாகும். இக்கோள் சந்திரத்தரையில் இறங்குமா இறங்காதா என்பதுபற்றி எதுவும் கூறப்படவில்லை.


---

இவர்களுக்கு

## புளுதியால் தொல்லையாம்

நாரந்தனை, ஞாயிறு

நாரந்தனைப் பகுதியில் உள்ள குறுக்குக்கடல் வற்றிவிட்டதால் இக்கடலில் உள்ள உவர்நீர் நிறைந்த புளுதியை காற்று அயலிலுள்ள வீடுகளில் வாரி இறைத்துவிடுவதால் வளவுகளில் உள்ள தென்னை மரங்களும், கனிமரங்களும் பாதிக்கப்படுவதாக மக்கள் குறை கூறுகின்றனர். இக்குறுக்குக்கடலுக்கு அணித்தாயுள்ள கடுவில் பெருங்கடலிலிருந்து உவர் நீரைப் பாய்ச்சி உப்புவிளைவிக்கத் தொடங்கினால் இம்மாதிரி தொல்லை ஏற்படமாட்டாதெனவும், இதன்மூலம் இவ்வூர்மக்கள் வேலைவாய்ப்பைப்பெற முடியுமெனவும் கருதப்படுகிறது. குறுக்குக் கடலில் நீர்வற்றியதும் பெருந்தொகையாக உப்பு விளைவது குறிப்பிடத்தக்கது.

Eau de Cologne
COLIBRI

நோயாளிகளைப்
பார்க்கப் போகும்பொழுது
கொலிபிரிஒடிகொலோன்
எடுத்துச்செல்லுங்கள்
நான்கு அளவுகளில் கிடைக்கும்




COLIBRI
ஆவ்ரா அன் கோ
19, செட்டியார் தெரு,
கொழும்பு - 11. போன்: 27211
KMJ



...17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



| | |
|---|---|
| முதலாவது பரிசு | ரூபா 5000-00 |
| இரண்டாவது பரிசு | ரூபா 3000-00 |
| மூன்றாவது பரிசு | ரூபா 2000-00 |

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் — ரூபா 5000-00
ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் — ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிறார்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவறாதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, ம/பா. ஷெனித் அட்வெடைசிங், த. பெ. இல. 1479, கொழும்பு என்ற விலாசத்திற்கு" அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், ஷெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதையிட்டு எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்
பெயர்: ........................
விலாசம்: ........................
........................
வியாபாரியின்
பெயர்: ........................
விலாசம்: ........................
........................





கள்.

இவர்களை ஆணையாளரின் அனுமதி பெறமுன்புவேலைக்குச் சேர்த்துக் கொண்டதாகவும் இப்பொழுது நடைபெற்றுவரும் கணக்குப் பரிசோதனையின்பின் இவர்கள் சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்கள் சம்பளம் பற்றி சாவகச்சேரி நகரசபை ஆணையாளருக்கு எழுதியுள்ளதாகவும் தெரியவருகிறது. ......

இன்று

## ஜி. சி. ஈ உயர்தர கலைப்பகுதி முடிவுகள்

கோட்டை, திங்கள்

1969 மார்கழியில் நடைபெற்ற ஜி. சி. ஈ (உயர்தரம்) கலைப்பகுதி பரீட்சை முடிவுகள் இன்றுவெளியாகின்றன. இப் பரீட்சைக்கு 22,000 மாணவர் தோற்றியிருந்தனர்.

இந்த ஆண்டுப் பரீட்சை மார்கழிமாதம் 29ம் திகதி நடைபெறும் எனத் தெரிகிறது. விண்ணப்பங்களின் முடிவுதிகதி அடுத்த ஒக்டோபர் 15ந் திகதியாகும். இம்மாதம் 30ந் திகதிவரையும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## இருவருக்கு கிறிஸ் குத்து

புத்தூர், ஞாயிறு

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். தங்கவேலாயுதம் என்பவர் அச்சுவேலி தொண்டமானாற்றைச் சேர்ந்த பி. பாலச்சந்திரன், மணிவாசகம் ஆகிய இருவருக்கும் கிறிஸ் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தியதாக அச்சுவேலிப்பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதைத்தொடர்ந்து அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. சதாசிவம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் எஸ். தங்கவேலாயுதம் என்பரைத் தொண்டமானாற்றில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்தனர். பின்னர் மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் இவரை 13-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

காயமடைந்த இருவரும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

முன்காலத்தில் அறநெறி வழுவாது நின்றுவந்தவர்களில் யாரேனும் ஒருவரைப்பற்றி இடைவிடாது சிந்தித்துக்கொண்டிரு.

— மார்க்கஸ் அரேலியஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 29-ந் திகதி (14-9-70)


## தி. மு. க. ஆட்சியின் எதிர்காலம்

தமிழ்நாடு அமைச்சரவையிலிருந்து மூன்று பேர் விலகியதால், அந்த ஆட்சி பலவீனப்படுவதுடன், திராவிடமுன்னேற்றக்கழகம் பிளவுபடுமோ என்று பத்திரிகை நிருபர் கேட்ட ஒரு கேள்விக்கு, முதலமைச்சர் கருணாநிதி, அவ்வித பிளவு எதுவும் ஏற்படாதென்றார். தி. மு. க. வை ஒவ்வொரு கல்லாகக் கட்டி எழுப்பியவர்கள், 'இப்போது பெரிதாக வளர்ந்துள்ள அக்கட்டிடத்தைத் தகர்க்க முயலமாட்டார்கள் என்றும் கட்சியின் நன்மைக்காக சில தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தவர்கள், கட்சிக்குப் பணிசெய்வது தங்கள் கடமை என்றே உணர்வார்கள் என்று தாம் உறுதியாக நம்புவதாகத் தெரிவித்தார். அமைச்சர் பதவியிலிருந்து விலகிய திரு மதியழகன் பத்திரிகைக்காரர்களிடம் கூறியுள்ளது, முதலமைச்சரின் இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இந்தியாவிலேயே ஸ்திரமான ஆட்சி நடக்கும் ராஜ்யம் ஏதுமிருந்தால் அது தமிழ்நாடுதான்; தி. மு. க. ஆட்சியில் சிற்சில குறைகள் இருக்கக் கூடுமென்றாலும் சென்னை ''ஹிந்து'' பத்திரிகை கூறுவது போல் சட்டத்தையும் அமைதியையும் இந்த அரசாங்கம் கண்டிப்பாக நிலைநாட்டியுள்ளது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையே. வங்காளம் முதலிய வேறு பல ராஜ்யங்களிலுள்ள குழப்பம் ஒழுங்கின்மை இவற்றுடன் ஒப்பிடுகையில் இந்த சாதனையின் மதிப்பு உயர்ந்ததாகவுள்ளது. கைத்தொழில் துறையிலும் அபிவிருத்திக்கான நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளன. இந்நிலையில் தி. மு கழகமும் ஆட்சியும் குலையுமாயின் ஸ்திரமான மாற்று அரசாங்கம் அங்கு ஏற்படுவது அவ்வளவு சுலபமும், கட்சியைப் பலப்படுத்த அவர்களுக்கெல்லாம் உள்ள அக்கறையையும் காட்டுவதாகவுள்ளது. இந்த ராஜினாமாக்களால், கட்சி அதிக சுத்தமாகி, இனி அதிக மேலாகக் காரியங்கள் செய்யுமென்றும் எதிர்பார்ப்பது மிகையல்ல.

சட்டசபையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ராஜாஜியின் சுதந்திரக் கட்சிக் கிளையினர் எதிர்கிகாயல் நடுநிலைவகித்தது, தி. மு. க. ஆட்சியாளருக்குக் கவலை அளித்துள்ளது தான் தலைமை அரசாங்க அரசியல் காரணத்துக்காகவே சுதந்திரக்கட்சியினர் இவ்வித நடுநிலைமைவகித்தனரேயன்றி, தமிழ்நாடு அரசியல்காரணத்துக்காக அல்ல. மேலும் டில்லிசபையில் பிரதமர் இந்திராவின் ஆட்சியை ஆதரித்து தி மு க. மெம்பர்கள் வாக்களித்திருக்கையில், தமிழ்நாடு சட்டசபையில், புதிய காங்கிரஸ் (இண்டிகேட்) மெம்பர்கள் வாக்களிக்கும் சமயத்தில் சபையிலேயே இல்லாமற்போய்விட்டனர்; இதனால் தி. மு க. வுக்கும் இந்திராகாங்கிரசுக்கும் இனி உறவுகள் குலையக்கூடும். 'இண்டிகேட்' காங்கிரஸ் செய்த முன்மாதிரியையே தாங்களும் இனி டில்லியில் பின்பற்றலாமென்று முதல் அமைச்சர் கருணாநிதி கூறியது குறிப்பிடத்தக்கது. மேலும் ராஜாஜிக்கு தங்கள் மீது சிறிய தப்பபிப்பிராயம் இருப்பதாயும், அவர்எவ்வித முடிவுசெய்யினும் அவர் மீது தமக்குள்ள மதிப்பு கடுகளவும் மாருதென்றும், தாமும் தமது கட்சியும் அவர்மீது தொடர்ந்து மரியாதைகாட்டி வருவரென்றும் முதல் அமைச்சர் ராஜதந்திரத்துடன் கூறியுள்ளதால், இரு கட்சிகளுக்கிடையிலும் தற்காலிகமாக ஏற்பட்ட சிறு பிணக்கு நீங்கி மீண்டும் உறவுகள் பலப்படுமென்று

# இந்தியத் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குத் தடை இல்லை

## ஈழத்து இலக்கியத்தை முதலில் வளர்க்க வேண்டும்

### தமிழ் ஆலோசனைச்சபை வேண்டுகோள்

தமிழ்பேசும் மக்களின் கலை, கலாசார, இலக்கிய மற்றும் பிரச்னைகள்பற்றி கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவிப்பதற்காக பிரதமரினால் அமைச்சர் செ. குமாரசூரியர்மூலம் அமைக்கப்பட்ட தமிழ் ஆலோசனைச் சபையைச் சேர்ந்த நாங்கள் எங்களின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்திய தமிழ் சஞ்சிகைகளின் கட்டற்ற இறக்குமதிப் பிரச்னை குறித்து பிரதமருக்கு எங்களின் ஏகோபித்த முடிவுகளுடனும் ஆலோசனைகளுடனும் அனுப்பிய மனுவை, அதே சமயத்தில் மக்களின் முன்னரும் சமர்ப்பித்தோம்.

இந்தப் பிரச்னை குறித்து இலக்கிய நிறுவனங்களும், வெகுஜன ஸ்தாபனங்களும் இலக்கியப்பற்றுள்ள தனி நபர்களும் தெரிவிக்கும் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் விரிவாக ஆராய்ந்து அவற்றின் உள்ளடக்கத்தையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவிருக்கிறோம்,

இந்தச் சந்தர்ப்பத்திலே இப் பிரச்னையில் நாம் எடுத்துள்ள நிலையை விளக்குவது நமது கடமை என்று நாம் உணர்கிறோம்.

இது சம்பந்தமாக நாம் நடத்திய விரிவான கருத்துப் பரிமாறல் ஒரேஒருகேந்திர இலட்சியத்தையும், இலக்கையுமே அடிச்சரடாகக் கொண்டிருந்தது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற, சாதகமான, ஆக்கபூர்வமான சூழல்கள், யாவை? இவற்றை எவ்வாறு ஏற்படுத்துவது? என்பதிலேயே எமது சிந்தனை முழுவதும் கால்கோள் கொண்டிருந்தது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவத்திற்கும், ஈழத்து மக்களின் பிரச்னைகளையும், அபிலாஷைகளையும், அடிநாதமாகக்கொண்ட உண்மையான தேசிய இலக்கியத்தின் செழிப்பான வளர்ச்சிக்கும் 'இலக்கியம்' என்ற போர்வையில் இந்தியாவிலிருந்து கட்டற்ற முறையில் வந்து சேரும் 'வர்த்தக வெளியீடுகள்' பாதகமான தா...

அல்லற்படும் துக்ககரமான உண்மையையும் கணக்கில் எடுத்துக்கொண்ட நாம் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியும் அதே ஏகபோக சஞ்சிகைகளின் கட்டற்ற இறக்குமதியாலும், செல்வாக்காலும் தான் தலைதூக்க முடியாது அரும்பிய நிலையிலேயே கருகிப் போகிறது என்ற உண்மையையும் அவதானித்தோம்.

ஆகவே இந்தப் பாதிப்பிலிருந்தும், தாக்கத்திலிருந்தும் ஈழத்துத் தமிழ் இலக்கியம் மீளவேண்டும் என்று வலியுறுத்தும் ஈழத்து எழுத்தாளர்களினதும், இலக்கிய அபிமானிகளினதும் கருத்தை நாம் அனுதாபத்துடனும் பிரக்ஞை பூர்வமான ஆக்க நிலையிலிருந்தும் அணுகினோம்.

இந்தப் பாதிப்பை நீக்க முன் வைக்கப்பட்டு வரும் பல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் நாம் அவற்றின் எதிர்மறை, உடன்பாட்டு நிலைகளில் வைத்து ஆராய்ந்தோம்.

ஈழத்து த்மிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்க இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் அனைத்து தடை செய்யப்படவேண்டும் என்பது ஒரு கருத்து.

இந்த கருத்தை நாம் முற்றிலும் நிராகரித்துள்ளோம். அறிவுக்கோ இலக்கியத்திற்கோ எவ்விதத்தடையும் இருக்கலாகாது என்ற ஜனநாயகப் பண்பின் மூலக்கூற்றை நாம்பற்றுறுதியுடன் முன்வைக்கிறோம்.

ஈழத்தின் சுதந்திரத்திற்கும், சுய திபத்தியத்திற்கும் ...மெய்யான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலமையும் அந்நியப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் தடை செய்ய ... உரிமை உண்டென்ற போதிலும், இலக்கியம் சம்பந்தப்...

இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல களத்தை அமைத்துக் கொடுக்கும் என்றும் நாம் கருதுகிறோம்.

இலக்கியமோ, கலாசார வெளிப்பாடுகளோ, பண்பாட்டுறவோ இருவழிப் பாதைகளாகத்தான் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தும் அதேவேளையில் தமிழகத்து இலக்கியத்துடன் எமது மக்களுக்குள்ள உறவு துண்டிக்கப்படுதை நாம் வன்மையுடன் நிராகரிக்கிறோம்.

ஆகவே இலக்கியத்தில் தடைபற்றிய பேச்சுக்கே இடமில்லை.

இரண்டாவது கருத்து தரமற்ற சஞ்சிகைகளைமுற்றாகத் தடை செய்யலாம் என்பது மட்டரகமான, ஆபாசமான, கீழான உணர்வுகளைத் தூண்டுகின்ற சஞ்சிகைகளைத் தவிர்ப்பது என்பதில் எமக்குக் கருத்துமாறுபாடு இல்லை என்றபோதிலும், சஞ்சிகையின் தரம்-இலக்கிய அந்தஸ்து ஆகியவற்றை நிர்ணயிக்கும் விவகாரத்தில் கருத்தொருமைப்பாடு காண்பது நடைமுறைச்சாத்தியமற்றதாகும். அத்துடன் இலக்கியத்தரத்தை நிர்ணயிக்கும் உரிமையை ஒரு சிறு குழுவினரிடமோ அல்லது சில அதிகாரிகளிடமோவிட்டு விடுவது காலப்போக்கில் எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்துவதாக அமையலாம்.

அத்துடன் ஒரு வாசகன் தரமானது, படித்துப் பயனுற வேண்டியது எது என்பதை வேறுயாரோ அவனின் சார்பில் நிர்ணயிக்கவிடுவது வாசகனின் உரிமையை சுவீகரித்துக் கொள்வதாகவும் முடியலாம்.

மூன்றாவது கருத்து மக்களின் ரசனையைக் கவர்ந்த, வெகுஜன ரஞ்சகமான சஞ்சிகைகளின் இறக்குமதி அளவைக் குறைக்கலாம் என்பது. மக்களால் ...ண்மையி

நிலைமைகளையே உருவாக்குவதாக அமையக்கூடும்.

இந்தியத் தமிழ்ச்சஞ்சிகைகளின் இறக்குமதியை அரசாங்கமோ அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமோ கையாளலாம் என்பது பிறிதொரு கருத்து.

#### பிரச்னை என்ன

சஞ்சிகைகளின் மொத்த இறக்குமதியாளர்கள் மேற்கொள்ளும் அல்லது மேற்கொள்ளக்கூடிய பண மோசடிகளை அகற்ற இது உதவலாம் என்றபோதிலும் விற்பனை நிலையில் ஏற்படக்கூடிய மறுப்புச் சந்தையை இந்த ஏற்பாட்டால் நீக்கிவிடமுடியாது. அத்துடன் பிரச்னை பண மோசடிகளை அகற்றுவது மட்டுமோ அல்லது வெளிநாட்டுச் செலாவணி விரயத்தை நீக்குவதோ அல்ல. ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குள்ள பாதிப்புகளை அகற்றுவதும் வளர்ச்சிக்குத் தேவையான சூழல்களை உருவாக்குவதுமே ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முன்னுள்ள மையப் பிரச்னை. இந்தியத் தமிழ்ச் சஞ்சிகை இறக்குமதிப் பிரச்னைக்குக் காணப்படும் எந்தத் தீர்வும் இலங்கையில் தமிழ் இலக்கியமும் தமிழும் நிலையாக வளர்வதற்கான சூழலை உருவாக்கும் நன்நோக்கையும் மூல இலக்கையும் நிறைவு செய்வதாக அமைதல் வேண்டும்

ஆகவேதான் பிரச்னையின் பல்வேறு அம்சங்களையும் பல திசை நிலைகளிலிருந்து அணுகி ஆராய்ந்த நாம் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குள்ள பாதிப்புகள் அகற்றப்பட வேண்டும், தேசிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சாதகமான அத்தியாவசியமான சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஆக்கபூர்வமான நிலையில் நின்று ...

நல்ல ஏடுகளையும் சஞ்சிகைகளையும் தனிப்பட்ட ரீதியிலோ, கூட்டு முயற்சி மூலமோ உடன் ஆரம்பிக்குமாறு எழுத்தாளர் ஸ்தாபனங்களையும், பொது நிறுவனங்களையும் இலக்கிய ஆர்வமுள்ள குழுவினர்களையும், தனி நபர்களையும் நாம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த நன் முயற்சிகளுக்குக் கைகொடுத்து உதவுமாறும் உறுதுணையாக நிற்குமாறும் எழுத்தாளர்களையும், இலக்கிய அன்பர்களையும், தமிழ்ப் பற்றுமிக்க நல்லோரையும், பொது நிறுவனங்களையும் நாம் வெகு விநயமாக வேண்டுகிறோம்.

#### தவிக்கவிட முடியாது

நமது மக்களை எந்தக் காரணத்தைக் கொண்டும், எந்த நிலையிலும் இலக்கிய வறுந்தரத்தில்' தவிக்கவிட முடியாது. அவர்களின் இலக்கியத் தேவைகள்முற்ற முழுக்க நிறைவு செய்யப்பட வேண்டும்,

நல்ல முயற்சிகளுக்கு தமிழ் ஆர்வமும் இலக்கியப் பற்றுமிக்க நமது மக்கள் நிச்சயம் முழு மனதான ஆதரவு நல்குவார்கள் என நாம் திடமாகக் கருதுகிறோம். ஏனெனில் நாம் மக்களில் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்களின் இலக்...

## சமத்துவம் . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சபைகளினால் வெவ்வேறு நிலைகளிலே தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களால் விருத்திபெறவேண்டும். இம்மகாநாடு, மக்கள் பங்குபற்றும் ஜனநாயகம் செயலாற்றும் பிரதிநிதித்துவம் என்னும் தத்துவங்களை உள்ளடக்கியதாகப் பாராளுமன்றத்தில் ஒரு மேற்சபை இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றது.

ஜனாதிபதி, இரு சபைகளும் இணைந்த கூட்டமொன்றில் தெரிவுசெய்யப்படுவார்.

நீதிபரிபாலனம், சட்ட நிருபணம், நிர்வாகம் என்பனவற்றின் கட்டுப்பாடுகளின்றிச் சுதந்திரமாக இயங்கவேண்டும். உயர்தர நீதிமன்ற நீதிபதிகள் ஜனாதிபதியினால் பதவியிலிருக்கும் உயர்தர நீதிமன்ற நீதிபதிகளின் ஆலோசனையுடன் நியமிக்கப்படல் வேண்டும். அவர்களின் சம்பளம், அரசியல் திட்டத்தில் வரையறுக்கப்பட்டு ஓரிணைந்த நிதியிலிருந்து வழங்கப்படல் வேண்டும். குறைந்த படியிலுள்ள நீதிபதிகள், நீதியரசரையும் ஏனைய உயர்தர நீதிமன்ற நீதிபதிகளையுங்கொண்ட நீதிபரிபாலன சேவைக் குழுவினாலே நியமிக்கப்படுவர்.

இம்மகாநாடு பகிரங்க சேவையின் மேன்மையைப் பேணவும் உறுதிப்படுத்தவும், அதன் அங்கத்தவர்கள் ஒரு சுதந்திரமான பகிரங்க சேவைக் குழுவினாலே தெரிவுசெய்யப்பட்டுக் கட்டுப்படுத்தப்படல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றது. பகிரங்க சேவைக்குழு ஜனாதிபதியினாலே தெரிவு செய்யப்படல் வேண்டும். அதன் அங்கத்தவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பணியாற்றவேண்டும். அவர்களின் சம்பளம் ஓரிணைந்த நிதியினின்றும் வழங்கப்படல்வேண்டும்,

......

## ...கையெழுத்து ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிகளிலும் நான் கையெழுத்திடவில்லை.

நான் உதவி தேர்தல் அதிகாரியின் மேசைக் குசற்று அப்பால் அமர்ந்திருந்தேன் திரு நடராசா சில பத்திரங்களை சமர்ப்பித்ததையும் உதவி தேர்தல் அதிகாரியின் மேசையில் வைத்து அவர் எதனையோ எழுதுவதையும் பார்த்தேன் அவர் எழுதுவதியது ற்றி திரு. நடராசாவிடம் நான் கேட்டதாக நினைக்கவில்லை திரு. சுந்தரலிங்கத்திற்கும் திரு. நடராசாவுக்கும் மிடையில் சில வர்க்கு வாதங்கள் நடந்தன நியமனப்பத்திரங்களின் பிரதிகளை நான் திரு. நடராசாவின் பொறுப்பில் விட்டிருந்தேன் ஒவ்வொரு நியமனபத்திரங்களிலும் பிரதிகள் இருக்க வேண்டும். நியமனப்பத்திரங்களின் பிரதிகளில் ஒன்று ஒட்டப்படவேண்டும் ஆனல் எல்லாப் பிரதிகளுமல்ல!

எனது பெயரைச் சாதிடுவதற்கான தேவை திரு. நடராசாவிற்கு ஏற்படவில்லை திரு. நடசாசா எனதுபெயரை எழுதியதாக எனக்குப் பிறகு தெரிய வந்தது.

உதவித்தேர்தல் அதிகாரியின் மேசையிலிருந்த நியமனப்பத்திரத்தின் பிரதிகளில் ஒன்றில், அவர் எனது பெயரை எழுதியதாக அறிந்தேன். உதவி தேர்தல் அதிகாரி பத்திரங்களை திரு. நடராசாவிடமிருந்து பறித்ததை நான் காணவில்லை. காலை 11 மணிக்குப் பின்னர் திரு நடராசா எழுதினார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளன. இந்நிலையில் தி. மு கழகமும் ஆட்சியும் குலையுமாயின் ஸ்திரமான மாற்று அரசாங்கம் அங்கு ஏற்படுவது அவ்வளவு சுலபமன்று. விலகிய அமைச்சர்கள் மூவரும் வெளியிட்டுள்ள அறிக்கைகளைப் பார்க்கும்போது, இக் கழகம் இனி பலவீனமடைவதற்குப் பதில் பலப்படுமென்றே எதிர்பார்க்கலாம்.

நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதம் முடிந்தவுடன் மூன்று அமைச்சர்களும் விலகியது, தங்களுக்குப் பெரிய வெற்றி என்று பழைய காங்கிரஸ் [சிண்டிகேட்] கட்சித் தலைவர் கூறிக்கொள்கிறார். எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த தீர்மானம் பெருவாரியான வாக்குகளால் தோற்றுவிட்டதால், அமைச்சர் யாரும் விலகியிருக்கத் தேவையில்லை. ஆனாலும் அம் மூவரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகியது, தி. மு. க. கட்டுப்பாட்டை அமைச்சர் ராஜதந்திரத்துடன் கூறியுள்ளதால், இரு கட்சிகளுக்கிடையிலும் தற்காலிகமாக ஏற்பட்ட சிறு பிணக்கு நீங்கி மீண்டும் உறவுகள் பலப்படுமென்று எதிர்பார்ப்பது அதிக தவறாகாது.

சென்னையிலே நேற்றும் முன்தினமும் நடந்துள்ள ராஜ்ய சுயாட்சிமகாநாட்டிலே நாட்டின் பல பகுதியிலிருந்தும் தலைவர்கள் பலர் கலந்துகொண்டிருக்கிறார்கள் இந்த மகாநாட்டை நடத்தி வைத்துள்ளதின் மூலம் முதல் அமைச்சர் கருணாநிதியின் மதிப்பு அகில இந்தியாவிலும் உயர்ந்துள்ளது அவரது ஆட்சி மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றதென்றாலும் அவரது அமைச்சரவையில் இருந்து மூவர் விலகியுள்ளது, தி. மு க. ஆட்சியைத் தூய்மைப்படுத்தி, அதன் மதிப்பையும் உயர்த்தியுள்ளது.

ஆசிரியருக்குக் கடிதம்

# இரட்டை வேடமா?; இல்லவே இல்லை!

'இரட்டை வேடமா' என்ற தலைப்பில், 9-9-70 'ஈழநாடு' இதழில், தோழர் சி. வைகுந்தவாசன் எழுதிய கடிதத்துக்குப் பதிலாகவும், தமிழர்களின் சிந்தனைக்காகவும் பின்வரும் குறிப்புகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(1) தமிழ் அரசுக் கட்சி' என்ற பெயர், தோழர் சி. வைகுந்தவாசன் கருதுவது போல் 'தமிழ் அரசாங்கக் கட்சி' (Tamil Government Party) என்ற பொருளில் அமைந்ததல்ல. அரசு என்ற 'State' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளையே இங்கு தருகின்றது. இலங்கையில், ஒரு மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தமிழ் அரசுகளையும் (Tamil States) உள்ளிட்ட, அரசுகளைக் கொண்ட இணைப்பாட்சி (சமட்டி) அமைப்பு நிறுவப்படல் வேண்டுமென்ற அந்தக் கட்சியினரின் கொள்கையே, தமிழரசுக் கட்சி, சமட்டிக்கட்சி என்ற இரு பெயர்களிலும் சுடர் விடுகிறது. மேலும் தமிழரசுக்கட்சியினரின் தேர்தல் விஞ்ஞாபனம் போன்ற உத்தியோக பூர்வமான கட்சி வெளியீடுகளிலும், கட்சி, 'இலங்கைத் தமிழரசுக் கட்சி' என்ற ஒரே பெயராலேயே குறிக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும், அமர்த்திய திரு. திருச்செல்வம் தமிழரைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. அவர்களால் தெரிவு செய்யப்படவில்லை என்பது பொருத்தமற்ற வாதமாகும். தமிழினம் 113 வாக்குகளை மட்டும் அளித்து கட்டுக் காசையும் பறித்துக் கொண்டு ஈவிரக்கமின்றி நிராகரித்து விட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர் திரு. குமாரசூரியர் தமிழினத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறப்படுவது ஒரு கணநேர சிந்தனைக்கு முன் தாக்குப் பிடிக்க முடியாத போலி வாதமாகும்.

தொழிற்றுறை, நீதித்துறை, நிர்வாகத்துறை, கல்வித்துறை ஆகிய துறைகளில், தமிழ் மொழியும், தமிழினமும் மிகக்கொடுமையான முறையில் பாரபட்சம் காட்டி நடத்தப்படும் இச் சந்தர்ப்பத்தில், தோழர் வைகுந்தவாசன் போன்ற பெரியார்கள் தமிழினத்துக்காகப் போராடாவிட்டாலும், நியாயத்துக்காகப் போராடுவார்கள் நேர்மையான அரசியற்றொண்டு புரிவார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

நயினை. நா. சிவராசசிங்கம்

'இலக்கியம்' என்ற போர்வையில் இந்தியாவிலிருந்து கட்டற்ற முறையில் வந்து சேரும் 'வர்த்தக வெளியீடுகள்' பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது குறித்து ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் இருவிதமான கருத்துக்கள் இல்லை என்பதை நாம் அவதானத்திற்கெடுத்துக் கொண்டோம்

ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மெய்யான ஆர்வம் கொண்டிருந்த தமிழ் அன்பர்களும், இலக்கியப் பிரியர்களும், எழுத்தாளர் நிறுவனங்களும் கட்சிபேதமின்றி ஒரு தசாப்த காலமாக இந்தப் பிரச்னையில் முன் வைத்து வந்த கருத்துக்களையும், இந்த இயக்கம் தோன்றுவதற்கான வரலாற்றுச் சூழ்நிலைகளையும், இலக்கியத் தேவைகளையும் நாம் கவனத்திற்கெடுத்துக்கொண்டோம்

தமிழகத்திலேயே சில வர்த்தக ரீதியான சஞ்சிகைகளின் ஏகபோகத்திற்கும், ஆதிக்கத்திற்கும் எதிராக தரமான தமிழ்ச் சஞ்சிகைகள் தாக்குப் பிடித்து நிற்க முடியாது மாண்டு மடிந்த வரலாற்றையும், அங்கு பல இடுக்கண்களுக்கு மத்தியில் வெளி வந்துகொண்டிருக்கும் சில தரமான சஞ்சிகைகள் கூட போட்டிக்கும் முகம் கொடுக்க முடியாது.


ஏற்படுத்தும் வகையிலமையும் அந்நியப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் தடை செய்ய சுதந்திர இலங்கைக்கு உரிமை உண்டென்ற போதிலும். இலக்கியம் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் தடைவிதிப்பு என்ற ஆரோக்கியமில்லாத போக்கிற்கு நாம் உடந்தையாகவோ அனுசரணையாகவோ இருக்கமுடியாது.

## இடுகுத் திரை வேண்டாம்

ஈழத்துத் தமிழ் மக்களுக்கும் இந்தியத் தமிழ் மக்களுக்குமிடையிலான பன்னெடுங்காலத்து பண்பாட்டுறவும், கலாசார பரிச்சயமும் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும், பேணப்பட வேண்டும் என்றும் நாம் கருதுகிறோம். எனவேதான் இந்த விவகாரத்தில் எவ்வித 'இடுகுத் திரை' களை நாம் அனுமதிக்கமுடியாது.

மனித குலத்தினது கலாசார பரிவர்த்தனை பரஸ்பரம் அனைத்து மக்கள் பிரிவினரினதும் முற்னேற்றத்துக்கும் நாகரீக வளர்ச்சிக்கும் அத்தியாவசியமான முன்தேவை என்று நாம் கருதுகிறோம். ஆகவேதான் தரமான இந்தியத் தமிழ் இலக்கியத்துடனும், நல்ல இலக்கிய முயற்சிகளுடனும் நமது மக்கள் தொடர்பும் பரிச்சயமும் கொள்ளல் அவசியம் என்றும், இது நமது

## மிருதங்க அரங்கேற்றம்



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சங்கீத பூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதனின் மாணவர் செல்வன் ஜெயன் செல்வக்குமாரின் மிருதங்க அரங்கேற்றம் இன்று மாலை நடைபெறவிருக்கிறது. டாக்டர் என். ரி. சம்பந்தன் திருமதி சம்பந்தன் ஆகியோர் முன்னிலையில் இவ்வரங்கேற்றம் நடைபெறும்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மூன்றாவது கருத்து மக்களின் ரசனையைக் கவர்ந்த, வெகு ஜன ரஞ்சகமான சஞ்சிகைகளின் இறக்குமதி அளவைக் குறைக்கலாம் என்பது.

மக்களால் உண்மையிலேயே விரும்பப்படுகின்ற அவர்களது ரசனைக்குப் பாத்திரமான இலக்கிய ஏடுகளை மக்கள் பெற்றுக்கொள்ளும் உரிமை மறுக்கப்படலாகாது என்றே நாம் கருதுகிறோம்

என்றாலும் மக்களின் அபிமானத்தைச் சரியாகவோ தவறுதலாகவோ பெற்றுவிட்ட சஞ்சிகைகளின் தொகையைக் குறைப்பது பிரச்னைக்குத் தீர்வாக அமையாது என்பதுடன், பல மோசடிகளுக்கும் தில்லுமுல்லுகளுக்குமே வழிகோலிக்கொடுக்கும்.

இறக்குமதிக் குறைப்பு என்ற காரணத்தைக் காட்டி சஞ்சிகை இறக்குமதியில் ஏகபோகம் செலுத்தும் சிலர் செயற்கையான கட்டுப்பாட்டை ஏற்படுத்தி கறுப்புச்சந்தையை உருவாக்கலம், விலைகளைத் தாறுமாறாக உயர்த்தி வாசகர்களைக் கொள்ளையடிக்கலாம். அத்துடன் அனுமதிக்கப்படும் சஞ்சிகைகளின் பேரில் கள்ளத்தனமாக இச் சஞ்சிகைகளைப் பெருமளவில் இறக்குமதி செய்வதிலும் ஈடுபடலாம்.

இந்திய சஞ்சிகைகளுக்குக் கட்டுப்பாடு என்ற நிலை சந்தையிற் கிடைத்தற்கரியவற்றை நாடும்' உளவியலின்படி வாசகர்களின் கவனத்தை இந்தச் சஞ்சிகைகளின் பக்கமே கூடுதலாக நாடச் செய்யலாம்.

ஆகவேதான் இந்த ஏற்பாடு ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாதகமாக இருக்கும் காரணங்களை அகற்றுவதற்கோ ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தேவையான தற்காப்பையும் நல்ல வாய்ப்பான சூழலையும் உருவாக்கிக் கொடுப்பதற்கோ எவ்வகையிலும் வழி சமைக்காது. மாறாக மேலே குறிப்பிட்ட மேலும் பாதகமான

## நன்றி நவிலல்

இம்மாதம் 2-ம் திகதி நடைபெற்ற எமது மகளின் திருமணத்திற்கு வருகை தந்து பரிசில்கள் வழங்கியும் ஆசி கூறியும் சிறப்பித்த உறவினர், நண்பர்களுக்கும், மற்றும் வாழ்த்துச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ச. இராசரெத்தினமும் பாரியாரும், ''இராஜன் மில்'', புன்னாலைக்கட்டுவன்.

2946

டும், தேசிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சாதகமான அத்தியாவசியமான சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஆக்க பூர்வமான நிலையில் நின்று இந்திய சஞ்சிகைகளின் வர்த்தக ரீதியிலான இறக்குமதியை நிறுத்துவது வாசகர்கள் தாம் விரும்பும் சஞ்சிகைகளை சந்தா செலுத்திப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையைப் பாதுகாப்பது என்ற ஒரே ஒரு சரியான நடைமுறைச் சாத்தியமான முடிவுக்கு வந்தோம்.

இந்தத் தீர்வு புறத்தாக்கங்களிலிருந்து ஈழத்துத் தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கு நல்ல தக்க பாதுகாப்பை உருவாக்கிக்கொடுக்கும்.

அதே நேரத்தில் தாம் உண்மையிலேயே விரும்பும் இந்திய சஞ்சிகைகளை வாசகர்கள் எவ்வித தங்குதடையுமின்றிப் பெற்று வாசித்து இன்புற அவர்களுக்குள்ள உரிமையையும் இது பாதுகாக்கும்.

அத்துடன் இது இந்தியத் தமிழகத்து இலக்கியப் படைப்புகளுக்கும் ஈழத்துத் தமிழர்களுக்குமிடையிலான உறவையும் பரிச்சயத்தையும் பேணவும் வகை செய்யும்.

ஆனால் இலக்கிய அரண் அமைப்பதுடன் நாம் ஆறுதல் அடைய முடியாது பாதுகாப்பு ஏற்பாடு எடுக்கப்படுவதுடன் நம் நாட்டில் தமிழ் இலக்கியம் செழித்து வளர்வதற்கான உருப்படியான செயலுக்குமுள்ள நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஈழத்துத் தமிழ் மக்களின் இலக்கியப் பசியை இந்திய வர்த்தக ஏடுகள்தான் தீர்க்க வேண்டும் எனும் சுயநம்பிக்கையற்ற தேசியப் பற்றற்ற கருத்து இன்று செல்லுபடியாகாது. நமது நாட்டிலே தரமானதும் ஜனரஞ்சகமானதுமான சஞ்சிகைகளை வெளிக்கொண்டு வரக்கூடிய ஆற்றல்மிகு பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் இலக்கிய அன்பர்களும் நிறைய இருக்கிறார்கள்.

இந்த ஆற்றல், திறன், வாய்ப்பு அனைத்தையும் பயன்படுத்தி நல்ல தரமான சஞ்சிகைகள் பல தோன்றுவதற்கும், ஏற்கனவே உள்ள சஞ்சிகைகள் மேலும் வளர்வதற்கும் மெய்யான வாய்ப்புகளும் சாத்தியப்பாடுகளும் உள்ளன.

ஆகவேதான் நமது மக்களின் அறிவுப்பசியையும் இலக்கியத் தேவையையும் பொழுது போக்கு ரசனையையும் ஈடுசெய்யக் கூடிய

நிச்சயம் முழு மனதான ஆதரவு நல்குவார்கள் என நாம் திடமாகக் கருதுகிறோம். ஏனெனில் நாம் மக்களில் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்களின் இலக்கிய ரசனையையும் தரத்தையும் பெரிதும் மதிப்பவர்கள்.

நமது தேசியத் தமிழ் இலக்கியம் நிலையுறுதியான வளர்ச்சியை அடைந்த பின்னர் இந்தியாவுடன் உயர் மட்டத்தில் செய்து கொள்ளும் கலாசார ஒப்பந்தத்தின் மூலம் ஈழத்து இலக்கிய ஏடுகளும் சஞ்சிகைகளும் கணிசமான அளவில் இந்தியாவுக்குப் போகவும், இந்தியத் தமிழ் இலக்கிய ஏடுகளும் சஞ்சிகைகளும் கணிசமான அளவில் இலங்கைக்கு இறக்குமதியாகவும் ஏற்பாடுகள் செய்ய முடியும் என நாம் நம்பிக்கையுடன் பார்க்கிறோம்.

இந்த இடைக்காலத்தில் இந்தியத் தமிழ் இலக்கியப் படைப்புகளுடன் ஈழத்துத் தமிழ் மக்களும். ஈழத்துத் தமிழ் இலக்கிய சிருட்டிகளுடன் தமிழக மக்களும் பரிச்சயத்தைப் பேண இருநாடுகளினதும் சஞ்சிகைகளில் இரு நாட்டு எழுத்தாளர்களினதும் படைப்புகள் வெளிவர ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுவது அவசியம் எனவும் நாம் கருதுகிறோம். இது இரு வழிக்கலாச்சார உறவினைப் பேண உகந்த வழியை அமைத்துக்கொடுக்கும்.

எம்மைப் பொறுத்தமட்டில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின், தமிழ்ப் பெருமக்களின் எந்த ஒரு நலனுக்கும் ஊறோ, இடுக்கண்ணோ ஏற்பட இடமளிக்க முடியாது என்று நாம் நேர்மையாகக் கருதுகிறோம்.

ஆகவேதான் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான ஆக்க பூர்வமான திட்டம் ஒன்றை நாம் அரசிடம் சமர்ப்பித்துள்ளோம். இத் திட்டத்தைச் செயற்படுத்தவும், ஈழத்துத் தமிழ்த் தேசிய இலக்கியம் செழிப்புற வளரவும் நாம் நம்மாலான தனைத்தையும் செய்வோம் என தமிழ்ப் பெருமக்களுக்கு உறுதியளிக்கிறோம்.

அதே சமயத்தில் ஈழத்தில் தமிழ் வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் ஆவன அனைத்தையும் துரிதமாகச் செய்யுமாறு அனைவரையும் அன்புடன் மீண்டும் வேண்டுகிறோம்.

நமது எல்லோரினதும் நன் முயற்சிகள் வெற்றி பெறுவதாகுக. ஈழத்துத் தமிழ் இலக்கியம் தினை மணிகளுடனும் ரோஜாமலர்களுடனும் செழித்து வளர்வதாகுக.

பெயரை எழுதியதாக அறிந்தேன். உதவி தேர்தல் அதிகாரி பத்திரங்களை திரு. நடராசாவிடமிருந்து பறித்ததை நான் காணவில்லை. காலை 11 மணிக்குப் பின்னர் திரு நடராசா எழுதினரா என்று என்னால் சொல்ல முடியாது. திரு. சுந்தரலிங்கம் எழுத்துமூலம் ஆட்சேபம் தெரிவித்த பின்னர் திரு. நடராசா எழுதினரா என்று எனக்குத் தெரியவில்லை.

(பத்திரம் ஒன்று காட்டப்பட்டது) இப்பத்திரத்திலுள்ள எனது சாதாரண தமிழ் கையெழுத்து. நியமன தினத்திற்கு முதல் நான் ஆஸ்பத்திரியில் இருக்கவில்லை நான் 'புளுவினல்' பீடிக்கப்பட்டிருந்தேன். வீட்டில், எனது டாக்டர் மூலம் சிகிச்சை பெற்றேன். எனது ஆசனத்திற்கு செல்ல உதவிபெறக்கூடிய அளவு நியமனதினத்தன்று நான் பெலயீனமாக இருக்கவில்லை.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது: எனது சார்பில் இரண்டு சோடி நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இரண்டு உண்மையான பிரதிகளும், இரண்டு பிரதிகளுமாகும். அந்த இரண்டு நியமனப்பத்திரங்களின் பிரதிகளை தயாரிக்க நான் திரு. நடராசாவுக்கு அனுமதிவழங்கியிருந்தேன் அவர் பிரதிகளை தயாரித்திருந்தார்: தவறுதல் காரணமாக அவர் எனது பெயரை எழுத மறந்துவிட்டார் பின்னர் அவர் எழுதினார்.

காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்ட திரு. சி. சுந்தரலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: திரு செல்வநாயகம் நான்காவது அபேட்சகர். நியமனப் பத்திரங்கள் காலை 11 மணிக்கு பின்னர் உடனடியாக எனதுபார்வைக்காககொடுக்கப்பட்டன.

வழ: நியமனப்பத்திர பிரதிகள் காலை 11 மணிக்குமுன்னர் கொடுக்கப்பட்டது?- அது உண்மையல்ல,

வழ: ஏற்கனவே நீர் ஆட்சேபம் தெரிவித்தபோது உதவி தேர்தல் அதிகாரி காலை 11 மணிவரை காத்திருக்கும்படி கூறினர்?- நான் அதை மறுக்கிறேன்,

எனது கோரிக்கையின் பேரில் நியமனப்பத்திரங்கள் தரப்பட்டன. முதல் மூன்று நியமனப்பத்திரங்களும் திரு செல்வநாயகத்தினுடையது. அவற்றில் நொத்தாரிஸின் 'சீல்' இருக்காததோடு, திரு செல்வநாயகத்தின் கையெழுத்தும் இருக்காததுஎனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org